விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 தை 11 புதன்கிழமை (25.01.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லன்ட்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# 13ஆவது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்த அரசுக்கு நாட்டமில்லை



## ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு), 13ஆம் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதில் அரசாங்கத்திற்கு நாட்டம் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்வது குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எதுவித அர்த்தமும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். எனவே அதிகாரப்பகிர்வு தொடர்பில் உரிய திட்டமொன்றை முன்வைப்பதே சாலச் சிறந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

ஜெனிவா கூட்டம்

## சர்வதேச நாடுகளுக்கு அமைச்சர் குழு விரைவு

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிரான போர்க் குற்ற விவகாரத்தை கையில் எடுக்கத் திட்டமிட்டுள்ளன.

இந்நிலையில் மேற்குலக நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முக்கிய அமைச்சர்கள் தலைமையிலான குழுக்களை அமைத்துள்ளார்.

இதன் பிரகாரம் அமைச்சர்கள் தலைமையிலான குழுக்கள் அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு சென்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளன.

(இது தொடர்பான விரிவான செய்தி 16 ஆம் பக்கத்தில் பார்க்கவும்)

## மீனவர் பிரச்சினைக்கு கலாமின் 2 யோசனைகள்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இந்திய, இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக பேச்சு நடத்தியதாக இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்தார்.

இதில் ,குறிப்பாக தனக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புள்ளதால் இலங்கை ஜனாதிபதியுடன் மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் முக்கிய பேச்சு நடத்தியதாக அவர் குறிப்பிட்டார்.

மீனவர் (02ஆம் பக்கம். பார்க்க)

# தமிழ் மக்களுக்கு நீதி வழங்க இலங்கை அரசு தவறிவிட்டது

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

இலங்கையில் நீண்ட காலமாக இடம் பெற்ற போரின்போது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை வழங்கவோ பொறுப்புக் கூறவோ இலங்கை அரசாங்கம் தவறியுள்ளதாக மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சுமத்தியுள்ளது.

உலக மனிதவுரிமைகள் நிலைமைகள் குறித்து 2012 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ளதும் இந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

90 நாடுகளின் மனிதவுரிமை நிலைமைகள் குறித்து கவனம்செலுத்தப்பட்டுள்ள இவ்வறிக்கை 676 பக்கங்களைக் கொண்டுள்ளது. இவ்வறிக்கையில் இலங்கை தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட மனிதவுரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலானஅரசாங்கம் படைத்தரப்பினரைப் பாதுகாத்து வருகின்றது.

அத்துடன், (20ஆம் பக்கம் பார்க்க)

# மகசின் சிறையில் பெரும் கலவரம்; கட்டிடங்கள் தீ வைப்பு; 28 பேர் காயம்





## தமிழ் அரசியல் கைதிகள் பாதுகாப்பாக சிறை மாற்றம்

கொழும்பில் அமைந்துள்ள பிரதான சிறைச்சாலையான மகசின் சிறைச்சாலையில் (வெலிக்கடைச் சிறை) நேற்று காலை கைதிகளுக்கும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கும் இடையில் உருவான பிரச்சினை பெரும் கலகமாக வெடித்துள்ளது.

இதன்போது சிறைச்சாலை கட்டிடங்கள் பலவும் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. இரு தரப்புக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களில் 4 சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட 28 பேர் படுகாயமடைந்தனர். நிலைமைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக அதிரடிப் படையினரும் பொலிஸாரும் கண்ணீர் புகைத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

இக்கலவரத்தையடுத்து தமிழ் (20ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர்கள் குழு அறிக்கை குறித்து உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டும்

## ஐ.நா.பேச்சாளர் தெரிவிப்பு

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போர் தொடர்பிலான நிபுணர்கள் குழுவின் அறிக்கையைக் கவனத்தில் எடுப்பது குறித்து ஐக்கிய நாடுகள்சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளே தீர்மானிக்க வேண்டும் என ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் பேச்சாளர் மார்ட்டின் நெஸர்க்கி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பில் அவர்களே (20ஆம் பக்கம் பார்க்க)

# 13-வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் அதிகார வலுவூட்டல்

## டாக்டர் கலாம் வலியுறுத்து

(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் அதிகார வலுவூட்டல் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்கியதாக இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மும்மொழிக் கொள்கை அமுல்படுத்தப்படுவதால் அடுத்த 15 வருடங்களில் இலங்கையில் பாரிய மாற்றம் ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் இலங்கைக்கான 5 நாள் உத்தியோக பூர்வ விஜயத்தின் இறுதி நாளான நேற்று ஊடகவியலாளர்களை சந்தித்தார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த டாக்டர் அப்துல் கலாம்,

மும்மொழிக் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கடத்தல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

காணாமல் போனோர் மற்றும் கடத்தப்பட்டோர் தொடர்பில் அரசின் மெத்தனப் போக்கை கண்டித்து அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று மாலை 5.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை ஆர்வலர்கள், காணாமல் போனோர் மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள்எனப்பலர்கலந்துகொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று மாலை 5 மணியளவில் ஆரம்பமாகி அமைதியான முறையில் இடம்பெற்றதுடன், கையில் தீபத்துடன் ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் கத்தோலிக்க தேவாலயத்தில் வழிபாட்டிலும் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன கருத்துத் தெரிவிக்கையில்,

சகோதரர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் போய் இரண்டு வருடங்கள் நிறைவடைகின்றது. ஆனாலும் இது தொடர்பில் எதனையும் தெரிவிக்கும் வல்லமையில் இந்த அரசு இல்லை. அரச சார்பில் முன்னாள் சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ், பிரகீத் வெளிநாட்டில் ஒளித்திருப்பதாக தெரிவித்தார்.

ஆனாலும் பிரகீத் எங்கு, எப்படி இருக்கின்றார், எவ்வாறு இந்தத் தகவல் பெற்றுக் கொள்ளப்பட்டது எனக் கூறுவதற்கு அவரால் முடியாதுள்ளது. இது தொடர்பில் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு இந்த அரசினாலும் முடியாதுள்ளது.

இந்த இரண்டு வருடங்கள் நிறைவடைந்துவிட்டதுடன், கடத்தல், காணாமல் போதல் சம்பவங்கள் நின்றபாடில்லை. இன்றும் கடத்தல்கள் இடம்பெற்றுக்கொண்டே இருக்கின்றது. அண்மையிலும் மாளிகாவத்தை பகுதியில் இருவர் வந்து அந்தப் பகுதியில் இருந்தவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஒரு வரைக் கடத்திச் செல்ல முற்பட்டனர்.

இதற்கு அரசாங்கம் பாதாள உலகக் குழுவினர் மீது குற்றம் சுமத்துகின்றது. அரசு இது போன்ற பல சந்தர்ப்பங்களிலும் பாதாள உலகக் குழுக்கள் மீது பழி போட்டு தப்பித்துக் கொள்கின்றது. இது போன்ற சம்பவங்கள் வடக்கில் இடம்பெறும் போதும் இதனையே கூறுகின்றது.

ஆனாலும் இந்த அரசாங்கம் ஒரு பயங்கரமான அடக்குமுறையைக் ஃகையாள்கின்றது. வடக்கில் இருப்பது முழுமையான இராணுவ ஆட்சியே, அப்படி இருக்கையில் எப்படி? வேறொரு அணியினர் வந்து கடத்திச் செல்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# கோட்டக்கல்வி பணிப்பாளராக நியமனம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனத்தை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் வழங்கியுள்ளார்.

உரும்பிராய் இந்துக் கல்லூரியில் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக அதிபராக இருந்த இவர் கடந்த வருடம் இக்கல் லூரியின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடத்தியதுடன் சகல வசதிகளுடனும் கூடிய மண்டபத்தை நிர்மாணிப்பதிலும் முன்னிற்று உழைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)

# விழுது நிறுவனம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

(கொழும்பு)

விழுது ஆற்றல் மேம்பாட்டு நிலையத்தின் கொழும்பு பிரதான காரியாலயம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளதாக அதன் தலைமை நிர்வாகி தெரிவித்துள்ளார்.

தமது நிலையத்தில் ஏதோ ஒரு ஆவணத்தை தேடும் முயற்சியில் இனந்தெரியாத நபர்கள் தீவிரமாக ஈடுபட்டதாகவும் குறித்த அதிகாரி தெரிவித்தார். இந்ததாக்குதலினால் அங்குள்ள பொருட்கள் மற்றும் கட்டிடத்துக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த விழுது மேம்பாட்டு அலுவலகம் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்கு முன்பாகவுள்ள ரொரிங்டன் அவனியுவில் அமைந்துள்ளது.

இவ் அலுவலகத்திற்கு முன்பாக கனேடியத் தூதுவர்வீடு நெதர்லாந்து தூதரகம். துனீசிய நாட்டு தூதரகம் பின்பக்கம் சுவீடன் தூதரகம் 200 மீற்றர் தூரத்தில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபம் ஆகியன அமைந்துள்ளன.

இந்த அலுவலகத்தின் பின் எல்லை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவின் காணி அமைந்துள்ளது. அத்துடன் உயர் பாதுகாப்பு வலயமாகவும் இந்தப் பகுதி விளங்குகிறது.

இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# மீனவர்...

களோடு நன்கு பழகிய மற்றும் மீன்பிடி தொடர்பில் நுணுக்கங்களை அறிந்து வைத்திருப்பவன் என்ற ரீதியில் சில விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தேன். இந்த யோசனைகள் மூலம் கடலின் அனைத்து பிரதேசங்களிலும் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவர்.

மீன்வளம் எங்கிருக்கிறதோ அதனைத் தேடி மீனவர்கள் செல்வர். இது இந்தியர்களாக இருக்கட்டும். இலங்கையர்களாக இருக்கட்டும். இல்லையேல் அமெரிக்கர்களாக இருப்பினும் இதனையே செய்வர். ஆகையால் மீன்பிடி தொடர்பில் இறுக்கமான சட்டங் களை பிரயோகிப்பது சாத்தியமற்ற விடயம். இதனை ஒருபோதும் யாராலும் இலகுவில் தடுக்கவும் முடியாது எனவும் டாக்டர் அப்துல் கலாம் கூறினார்.

இலங்கை வந்த இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பொன்றை நேற்று மேற்கொண்டார்.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் என்னென்ன விடயங்கள் தொடர்பில் உரையாடினீர்கள் என்று ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோதே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

இரு நாட்டு மீனவர் பிரச்சினை தொடர்பில் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுடனான சந்திப்பின்போது மீனவர்களின் பிரச்சினைக்கு இரண்டு தீர்வுகளை முன்வைத்தேன்.

அதில் முதலாவது, 7 நாட்களில் ஒருநாள் மீன்பிடி நடவடிக்கைக்கு ஓய்வு வழங்கல். ஏனைய 6 நாட்களில் 3 நாட்கள் இந்திய மீனவர்களும் ஏனைய 3 நாட்கள் இலங்கை மீனவர்களும் சாதகமான மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வழிசெய்தல்.

இரண்டாவதாக ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கையை ஊக்கு விப்பதாகும். இச்செயற்பாட்டில் நவீன வசதிகளைக் கொண்ட கப்பல்களை ஈடுபடுத்தி மீன்பிடி நடவடிக்கையை மேற்கொள்ளல்.

குறித்த மீன்களை கப்பலில் வைத்தே பதனிட்டு பொதிசெய்து கடல்பிரதேசத்திலேயே மொத்தமாக விற்பனை செய்ய முடியும்.

இச்செயற்பாடுகள் அனைத்தும் கடல் பிரதே சத்தில் இடம்பெறுவதனால் பல சிக்கல்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம். குறிப்பாக வரி செலுத்துகின்ற பிரச்சினையும் குறைந்து விடும்.

இந்த இரு யோசனைகளையும் முன்மொழிந்திருக்கிறேன். இந்தப் பிரச்சினைக்கு இனி எவ்வாறு ராஜதந்திர ரீதியில் தீர்வு காண்பது என்பது பற்றி இரு நாட்டுத் தலைமைகளும் சிந்தித்து முடிபெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டார். (பா)

# தென்னிலங்கை வியாபாரிகள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

தென்னிலங்கையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வர்த்தகம் செய்ய வந்த நடைபாதை வியாபாரிகள் எட்டுப்பேர் நேற்று இரவு 8 மணியளவில் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மானிப்பாயில் பொது இடத்தில் மது அருந்தியதினால் இவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (பா-6,11)

வர்த்தகப் பெருமக்களே
வியாபாரத்தை பதிவு செய்தல்
BUSINESS REGISTRATION
பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
VTL Management Services (Pvt) Ltd
No. 01, Deanston House,
Deanston Place, Colombo 03.
T.P. 072-8994777/011-7902938/ 011-4343339

'பிரயோக ஆங்கிலம்' : ஆசிரியர் : சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY : 077 3212711
வகுப்பிட அனுசரணை : புதிய உயர்கல்லூரி : யாழ்நகர் (7239)

# இந்தியாவுக்கு இடம்பெயர்ந்தோரில் 56 பேர் நேற்று நாடு திரும்பினர்

(கொழும்பு)

யுத்தம் காரணமாக இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த இலங்கைத் தமிழர்களில் 56பேர் நேற்று நாடு திரும்பினர். திருகோணமலை, மன்னார், வவுனியா, செட்டிகுளம் மற்றும் அம்பாறை பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்களில் 21 பெண்கள் உள்ளடங்கும். அதேவேளை, 18 வயதுக்கு குறைந்த 15 சிறுவர்களும் அடங்குகின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் அமைப்பு இவர்கள் நாடு திரும்புவதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தது.

இவ்வாறு நாடு திரும்பிய இவர்களை, குடிவரவு, குடியகல்வு பிரிவினர் விசாரணைகளுக்கு உட்படுத்திய நிலையில் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (பா)

# ஜனாதிபதியின் பாகிஸ்தான் பயணம் பிற்போடப்பட்டது


(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அடுத்தமாதம் முதல் வாரத்தில் பாகிஸ்தானுக்கு மேற்கொள்ளவிருந்த பயணம் பிற்போடப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் அறிவித்துள்ளது.

அடுத்தமாதம் 6 அல்லது 7 ஆந்திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாகிஸ்தான் சிங்கப்பூர், மியான்மாருக்கான பயணத்தை மேற்கொள்வார் என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந் நிலையில் ஜனாதிபதியின் பயணம் பிற்போடப்பட்டுள்ளதாகவும், அடுத்த மாதம் 9ஆம் திகதிக்கு பின்னரே புதிய பயணத் திகதி தீர்மானிக்கப்படும் என்றும் பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் அரசியல் குழப்பங்கள் காரணமாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பயணம் பிற்போடப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (பா)



காரைநகர் பொன்னாலைப் பாலத்தில் நேற்று நடந்த ஆட்டோ விபத்தில் பயணிகள் இருவரும் சாரதியுமாக மூவர் மயிரிழையில் உயிர்தப்பினர். காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த ஆட்டோ ஒன்று சில்லுக் காற்றுப்போனதால் பாலத்தின் கட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதனை செலுத்திய சாரதி அதனுள் இருந்த இரு பயணிகள் உட்பட மூவர் காயமடைந்தனர். இவ்விபத்துத் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்றுனராக கிரஹம் போர்ட்



இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய பயிற்றுவிப்பாளராக கிரஹம் போர்ட் நியமிக்கப்படவுள்ளார். கடந்த செப்டம்பர் மாதம் இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜெவ் மார்ஷ் நீக்கப்பட்டு, புதிய பயிற்றுனராக கிரஹம் போர்ட் நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் நேற்றுமுன்தினம் இரவு கிரஹம் போர்ட் இலங்கையை வந்தடைந்தார். 52 வயதான கிரஹம் போர்ட் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் பயிற்றுனர் என்பது குறிப்பிடத்தக்கது.

1999ஆம் ஆண்டு பொப் வூல்மருக்குப் பின்னர் தென்னாபிரிக்க அணியின் பயிற்றுனராக பதவியேற்ற அவர், 2001ஆம் ஆண்டுவரை அப்பதவியை வகித்தார்.

பின்னர் இங்கிலாந்தின் கென்ட் பிராந்திய கிரிக்கெட் இயக்குநராக 2004முதல் 2006ஆம் ஆண்டு வரை பதவிவகித்தார்.

2007ஆம் ஆண்டு இந்திய அணியின் பயிற்றுனராக பதவியேற்குமாறு கிரஹம் போர்ட் கோரப்பட்ட போதிலும் அதை அவர் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது. 2009 ஆம் ஆண்டு இங்கிலாந்து அணியின் பயிற்றுனர் பதவிக்கான வேட்பாளர்களின் பட்டியலில் இருந்து அவர் விலகினார்.

அதன்பின் தென்னாபிரிக்காவின் டேர்பனைத் தளமாகக்கொண்ட பிராந்திய அணியான டொல்பின் கழகத்தின் பயிற்றுநராக பதவி வகித்த அவர் கடந்த வாரம் அப்பதவியிலிருந்து விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# இன்று ஒரு தகவல்

## நுண்ணறிவு

ஓர் அரசன்– சேவகன் இரண்டு பேரும் ஒரு குதிரையின் மீது அமர்ந்திருந்து வந்தார்கள்.

இருவரும் அதிக தூரம் பயணம் செய்து விட்டார்கள். அரசனுக்குத் தாகம் எடுத்தது.

தண்ணீர் கிடைக்கும் இடத்தைப் பார்த்தார்கள். அக்கம் பக்கம் வீடுகள் எதுவும் இல்லை.

சிறிது தூரத்தில் வேலியில் ஒரு வெள்ளரிக்காய் பழம் தெரிந்தது.

"அதோ ஒரு வெள்ளரிப்பழம் தெரிகிறது. அதையாவது பறித்து சாப்பிடலாம்" என்று மன்னன் சொன்னார்.

"இதோ அதைப் பறித்துக் கொண்டு வருகிறேன்" என்று சேவகன் புறப்பட்டான்.

"அது வெள்ளரிப்பழம் இல்லை..." என்றொரு குரல்.

"யார் அது?" அவர்கள் இரண்டு பேரும் திரும்பிப் பார்த்தார்கள்.

ஒரு பார்வையிழந்த பிச்சைக்காரன். அருகில் இருந்த மரத்தடியிலே அமர்ந்திருந்தான். அவன்தான் அப்படிக் குரல் கொடுத்தவன்.

அரசன் பார்த்தான் "இவனுக்கோ பார்வை இல்லை. இவனுக்கு எப்படி அது வெள்ளரிப்பழமா இல்லையா என்பது தெரிந்தது?

நீ போய் பறித்துக்கொண்டு வா... இவன் ஏதோ தெரியாமல் சொல்கிறான்!" என்றார்.

சேவகன் போய் பறித்துக் கொண்டு வந்தான். மன்னன் அதை வாங்கி சாப்பிட்டார். வாயிலே வைக்க முடியவில்லை ஒரே கசப்பு.

அவனுக்கு ஆச்சரியம். பிச்சைக்காரனிடம் கேட்டார். "அது எப்படி... இது வெள்ளரிப்பழம் இல்லை என்பது உனக்குத் தெரிந்தது?" என்றார்.

அவன் சொன்னான்: "ஐயா இது நாலு பேர் வந்து செல்லுமிடம். அது வெள்ளரிப்பழமாக இருந்தால் வருகிறவர்கள் இவ்வளவு காலம் அதை விட்டு வைக்கமாட்டார்கள். அதனால்தான் அது வெள்ளரிப் பழமாக இருக்காது என்று நினைத்தேன்" என்றான்.

அடுத்தபடியாக தண்ணீருக்கு என்ன செய்யலாமென்று மன்னன் யோசித்தான்.

சேவகன் சொன்னான்; "அரசே! இங்கேயிருந்து நாலு பக்கமும் வீதி செல்லுகிறது. நான் இப்படியே கிழக்கே போகும் இந்த பாதை வழியாக போய் பார்க்கிறேன். அங்கே ஏதாவது நீர் நிலைகள் இருக்கும். தண்ணீர் எடுத்து வருகிறேன்" என்று புறப்பட்டான்.

இப்போதும் அந்தப் பார்வையிழந்த பிச்சைக்காரன் சொன்னான்; "ஐயா... கிழக்கே போனால் தண்ணீர் கிடைக்காது. தெற்கு செல்லும் பாதையிலே சென்றால் தண்ணீர் கிடைக்கும்" என்றான்.

அவன் சொன்ன மாதிரியே தெற்கே சிறிது தூரம் சென்றால் ஒரு பெரிய குளம். "இது எப்படித் தெரியும் உனக்கு?" என்று மன்னன் கேட்டார்.

"ஐயா... எனக்கு பாருங்கள் உடம்பில் சட்டை இல்லை. தெற்கே இருந்து வருகிற காற்று குளிர்ச்சியாக இருந்தது. அதனாலே அங்கே தண்ணீர் இருக்கும் என்று நினைத்தேன்" என்றான்.

அரசன் பார்த்தான் இப்படிப்பட்ட ஒரு ஆள் அரண்மனையிலே இருந்தால் பிரயோசனமாக இருக்கும். அப்படியே அவனைத் தூக்கி குதிரையிலே வைத்து அரண்மனைக்குக் கொண்டு சென்றார்.

தினமும் ஒரு பொட்டலம் சாம்பார் சாதம் அவனுக்குக் கொடுக்கும்படியாக சேவகனிடம் உத்தரவு பிறப்பித்தார் அரசன். அப்படியே தினமும் நடந்தது.

அந்த அரண்மனைக்கு ஒருநாள் ஒரு வைர வியாபாரி வந்தான். மன்னன் அவன் கொண்டு வந்த வைரக்கற்களை எல்லாம் வாங்கி இவனிடம் கொடுத்து சோதிக்கச் சொன்னான். இவன் வாங்கி... கையாலேயே சோதித்துப் பார்த்து அதையெல்லாம் இரண்டு பிரிவாகப் பிரித்தான்.

இடது பக்கம் இருப்பவையெல்லாம் வைரம். வலது பக்கம் இருப்பவையெல்லாம் கண்ணாடிக்கல்... என்று சொன்னான்.

"எப்படி கண்டு பிடித்தாய்?" என்று அரசன் கேட்டார்.

"ஒவ்வொரு கல்லையும் எடுத்து கையிலே மூடி வைத்திருந்து பார்த்தேன். உடம்பில் உள்ள சூடு கல்லிலே ஏறி விட்டால் அது வைரம். இல்லாவிடின் அது கண்ணாடி... அவ்வாறுதான் அதைக் கண்டு பிடித்தேன்" என்றார்.

அரசனுக்கு ஆச்சரியம்.

"சரி... இன்றிலிருந்து இவனுக்கு தினமும் ஒரு பொட்டலம் தயிர் சாதமும் சேர்த்து கொடுங்கள்" என்று உத்தரவு போட்டார். அப்படியே நடந்தது.

ஒருநாள் அந்த மன்னன் அவனிடம் கேட்டார் "என்னை எல்லோரும் பிச்சைக்கார ராஜா என்று கூறுகிறார்களே!" என்றார்.

"அதுவும் உண்மைதான். நீ உண்மையாகவே அப்படித்தான் இருக்க வேண்டும்" என்றார்.

"எப்படி தெரிந்து கொண்டாய்?" என்று மன்னன் கேட்டான்.

"நீ உண்மையாகவே பரம்பரை ராஜவம்சமாக இருந்திருந்தால் ஆரம்பத்திலே... அது வெள்ளரிப்பழம் இல்லையென்று சொன்னபோதே என் திறமையைப் பாராட்டி உன் கழுத்திலே உள்ள மணிமாலையை கழற்றி பரிசாக அணிந்திருப்பாய்"

"அது மட்டுமல்ல...ஒரு பொட்டலம் சாம்பார் சாதம்... ஒரு பொட்டலம் தயிர் சாதம்... இப்படி எந்த ராஜாவும் கொடுக்கமாட்டார்" என்றான்.

அதன்பின்புதான் அந்த அரசன் உண்மையைச் சொன்னான்; "ஐயா! நான் பரம்பரை ராஜா இல்லை... உன்னை மாதிரி பிச்சைப் பாத்திரம் ஏந்தியவன்தான். இந்த நாட்டு வழக்கப்படி அரண்மனை யானை என் கழுத்திலே மாலையை போட்டது... அதனாலே ராஜாவாகி விட்டேன்! அவ்வளவுதான் நடந்த சம்பவம் என்றார்.

பார்வையிழந்தாலும் நுண்ணறிவு எந்த அளவுக்குப் பார்வையாகப் பயன்படுகிறது என்பது இதில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கிளிநொச்சி கல்வி வலயத்தில் 8 பாடசாலைகள் புனரமைப்பு

கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள எட்டு பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டன என இலங்கை சிறுவர் நிதியத்தின் சிரேஷ்ட திட்டப் பணிப்பாளர் ஸ்ரீ.சரவணபவான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப்பாடசாலைகளின் புனரமைப்பு பணிகளுக்கு கொரிய நாட்டு சிறுவர் நிதியம், கொரிய நாட்டு சர்வதேச முகவர் அமைப்பு மற்றும் இலங்கை சிறுவர் நிதியம் என்பன இணைந்து 20 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் இப்புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டுள்ளன.

இந்நிதியில் புதிய கட்டடங்கள், சிறுவர் விளையாட்டு முற்றம், குடிநீர் தாங்கி அமைத்தல், கட்டடம் புனரமைப்பு என்பன கிளிநொச்சி கல்வி வலயத்திலுள்ள கிளி/ஜயனார்புரம் அ.த.க.பாடசாலை, கிளி/ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை, கிளி/பரந்தன் இந்து வித்தியாலயம், கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க.பாடசாலை, கிளி/கண்டாவளை மகா வித்தியாலயம், கிளி/செல்வாநகர் அ.த.க. பாடசாலை, கிளி/திருவையாறு மகாவித்தியாலயம், கிளி/கல்லாறு தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப்பாடசாலைகளுடைய கட்டடங்கள் திறப்பு விழாவும் வேலைத்திட்ட நிறைவு விழாவும் இன்று புதன்கிழமை முதல் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் நாளை வியாழக் கிழமை நடைபெறவுள்ள விழாவில் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கொரிய நாட்டு இலங்கைக்கான தூதுவர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் எனப்பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.(அ-7-15)

# நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா நேர்முக தேர்வு

இலங்கை நூலகச் சங்க நூலகத்தின் தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் I இற்கு 2012/ 2013 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் அமைந்துள்ள பௌதீகத்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக இலங்கை நூலகச்சங்க யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

இக்கற்கை நெறியினைத் தொடர விரும்புவர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையில் சித்தி அல்லது உயர் கல்வித் தகைமைகள் அல்லது க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட நூலகம் ஒன்றில் மூன்று வருட தொழில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விரிவுரைகளுடன் கூடிய வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் யாழ்ப்பாண நிலையத்தில் தமிழ் மொழியில் நடத்தப்படும். கற்கை நெறிக்கான கட்டணம் 12 ஆயிரத்து 500 ரூபா செலுத்தப்பட வேண்டும். அத்துடன் இதற்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்களும் மேற்படி நேர்முகத் தேர்வுக்கு தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், திருமணமான பெண்களுக்கு விவாகப் பதிவு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், பணிபுரிவோர் சேவைக்காலச் சான்றிதழ் ஆகிய ஆவணங்களுடன் அன்றைய தினம் தோற்ற முடியும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.(அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 90 |
| உருளைக்கிழங்கு | 65 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 140 |
| தக்காளி | 60 | 90 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 60 | 40 | 60 |
| கரட் | 60 | 100 | 90 |
| பூசணி | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 15-40 | 50 | 60 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 70 |
| பாகற்காய் | 100 | 140 | 140 |
| வெண்டிக்காய் | 60 | 90 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 70 | 70 |
| பயற்றங்காய் | 120 | 120 | 140 |
| லீக்ஸ் | 70 | 100 | 70 |
| பீற்றூட் | -- | 100 | 100 |
| கறிமிளகாய் | 160 | 140 | 170 |
| முருங்கைக்காய் | 350 | 350 | -- |
| போஞ்சி | 70 | 60 | 90 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 60 | 60 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 25 | 25 |

# இராசி பலன்

*25.01.2012*

*(தை 11,புதன்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.35 மணிக்கு*
*துதியை பிற்பகல் 1.29 மணிவரை*
*அவிட்டம் பிற்பகல் 5.16 மணிவரை*
*இராகுகாலம் 12.36-2.06 மணிவரை*
*சுபநேரம் 5.06-6.36 மணிவரை*

**மேடம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், நீங்கள் எதிர்பாராத முக்கிய பிரமுகர் ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம், எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும்.

**இடபம்** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும், சொத்து தகராறுகள் நல்ல முடிவுக்கு வரும்,தந்தை வழியில் தனலாபமுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புக்களை ஈடுசெய்ய முன்வருவீர்கள், எதிர்பாராத பயணங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**கடகம்** ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, வேலைச்சுமை கூடும், எடுத்த கருமங்கள் தாமதமாகும்.

**சிங்கம்** உடல் நலம் சீராகி உற்சாகமாக செயற்படும் நாள்,கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கௌரவமான நாள்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும்,மருத்துவச் செலவுகள் குறையும்,எடுத்த காரியங்கள் எளிதில் நிறைவேறும்,பிள்ளைகளால் பெருமை சேரும் நாள்.

**துலாம்** வியாபாரம்,தொழில் மேன்மையடையும் நாள், குலதெய்வ வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்,போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** செய்தொழில் மேன்மையுண்டு,இனிய செய்திகள் வந்து சேரும் நாள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** உடன்பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு, தொழில் முன்னேற்றமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** கற்பனை மிகுதியான நாள், உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவு கிடைக்கலாம், வாக்கு மேன்மையால் பிறரைக் கவர்வீர்கள், போசன சுகமுண்டு.

**கும்பம்** புதிய பொறுப்புக்களால் வேலைச்சுமை அதிகரிக்கும்,உறவினர்கள் நலன் கருதி ஒரு தொகையை கொடுத்து உதவும் நிலை ஏற்படலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் ஏற்படலாம்.

**மீனம்** காரிய அலைச்சல்களால் மனச் சோர்வு ஏற்படலாம்,சயன சுகக் குறைவான நாள்,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், எதிர்பாராத சில விரயங்களால் மன உழைச்சல்கள் ஏற்படலாம்.

வளவன்

# சிறிலங்கா சுதந்திர கட்சியின் ஏற்பாட்டில் யாழில் ஜே.வி.பிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

எங்களை சமாதானமாக வாழ விடுங்கள் என வலியுறுத்தி ஜே.வி. பிக்கு எதிராக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டில் நேற்று யாழ். நகரில் கண்டனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் முற்பகல் 11.00 மணியளவில் ஆரம்பித்த இந்த கண்டனப் பேரணி, ஆஸ்பத்திரி வீதியூடாக கஸ்தூரியார் வீதியை அடைந்து. பின்பு ஸ்ரான்லி வீதியூடாக மணிக்கூட்டு கோபுர வீதியை சென்றடைந்து இறுதியாக யாழ்ப்பாணம் பேருந்து தரிப்பிடத்தை நண்பகல் 12.00 மணியளவில் வந்தடைந்தது.

அங்கு இந்த கண்டனப் பேரணியை ஏற்பாடு செய்தவர்களினால் கருத்துரைகளும் வழங்கப்பட்டது.

இதில் யாழ். மாவட்டத்தில் இதுவரை காலமும் நியமனம் வழங்கப்படாத தொண்டர் ஆசிரியர்களும் பங்குபற்றியிருந்தனர்.

மேலும் இந்தப் பேரணியில் பங்கு கொண்டவர்களின் கைகளிலே எங்களுக்கு மீண்டும் யுத்தம் வேண்டாம். எங்களை சமாதானமாக வாழ விடுங்கள். எங்களுக்கு ஜே.வி.பி வேண்டாம். எங்கள் பிரச்சினைக்கு நாமே தீர்வு காண்போம், ஜே.வி.பியே உங்கள் பிரச்சினையை நீங்களே தீர்த்துக் கொள்ளுங்கள். லலித், குமார், குகன் பிரச்சினை உங்கள் உள்வீட்டுப் பிரச்சினை எனப் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்டிருந்த பதாகைகளையும் தாங்கியவாறு இந்தப் பேரணியில் பங்கு கொண்டிருந்தனர்.

இந்தப் பேரணி அரசாங்கத்திற்கு சார்பாகவும் ஜே.வி.பி. கட்சிக்கு எதிராகவும் நடைபெற்றதனால் பொலிஸார் எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை.

இது தவிர பொலிஸார் பேரணியில் ஈடுபட்டவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினர்.

இது தவிர சிறிலங்கா சுதந்திரக் கட்சிதான் எங்களுக்கு வேண்டும். ஜே.வி.பி கட்சி அல்ல எனவும் பேரணியில் ஈடுபட்டவர்கள் கோஷமிட்டவாறு பங்குகொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா-6)

# மின்தடை அறிவிப்பு

வீதி அகலிப்புப் பணிகளுக்காக உயரழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதனால் தினமும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இன்று புதன்கிழமை கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்திவரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்படவுள்ளது.

நாளை வியாழக்கிழமை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை,அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒருபகுதி ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (அ-7)

# இணக்க அரசியலூடாக தமிழர்கள் சரியான தீர்வினைப் பெறமுடியும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

இணக்க அரசியலினூடாகத்தான் தமிழ்மக்களுக்கு சரியான தீர்வினை பெறமுடியுமாம் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வன்னித் தொண்டராசிரியருக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாணத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனங்களை நாம் விரைவில் வழங்கவுள்ளோம். எனினும் அது மிகப்பெரிய சவால்களின் மத்தியிலேயே நடைபெறவுள்ளது.

நீங்கள் எம்மை எந்தளவிற்கு ஆதரிக்கின்றீர்களோ அந்தளவிற்கு நாம் உங்களைப் பலப்படுத்துவோம். எதிர்ப்பு அரசியல் ஒருபோதும் எமக்கு தீர்வினைப் பெற்றுத்தர மாட்டாது. அது அரசியல் பிழைப்புக்காகவே நடைபெறுகின்றது.

ஆகவே இணக்க அரசியலில் அனைவரும் இணைந்து உங்கள் நியாயங்களை வெகுவிரைவில் பெற்றுக்கொள்ளுங்கள் எனவும் உரையாற்றிய அவர், மேலும் சென்ற உள்ளூராட்சித் தேர்தலிலும் தலையாட்டி விட்டுச் சென்றீர்கள்.

ஆனால் ஒன்றும் நடக்கவில்லை எனவும் ஆதங்கத்துடன் தெரிவித்தார். (அ-4)

# திருநாள் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடம் புனித செபஸ்ரியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருச்செபமாலையும் திருப்பலியும் நாவாந்துறை பங்குத்தந்தை அருட்பணி பா.பி. இராஜசிங்கம் அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலி நற்கருணை வழிபாடும் நற்கருணை பவனியும் இடம்பெற்று மறுநாள் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி திருச்சொரூப பவனியும் திருச்சொரூப ஆசீர்வாதமும் நடைபெறவுள்ளது. (அ-7)





உலக தரிசனம் நிறுவனத்தினதும் ஆளுநரது நிதி உதவியுடனும் நிறுவப்பட்ட அராலிப் பகுதிக்கான நீர் விநியோக திட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.நீர்விநியோக பெயர்ப்பலகையினை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி,கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற குழு பிரதித்தலைவர் சந்திரகுமார் ஆகியோர் திரைநீக்கம் செய்து வைப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என். குமார்.)

# முதியோருக்கான சிகிச்சை வழங்கல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் முதியோர் சிகிச்சைப் பிரிவு வைத்தியசாலையின் 8 ஆம் இலக்க அறையில் சனிக்கிழமை தோறும் நடைபெறவுள்ளது.

இதில் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு வரும் 60 வயதிற்கு மேற்பட்ட நோயாளர்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதை சுட்டிக்காட்டியதை அடுத்து முதியோருக்கான சிகிச்சை அலகு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது முதியோருக்கான வைத்தியத்துடன் அவர்களுக்கான ஆலோசனைகளும் வழங்கக்கூடியதாக சனிக்கிழமை தோறும் நடத்தப்படவுள்ளது. (அ-7-29)

# திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலை உருவாக்கம்

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம் ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தில் உள்வாங்கப்பட்டதை அடுத்து வித்தியாலயத்தின் ஆரம்ப பிரிவு தனி அலகாக இயங்கவுள்ளது.

இது கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்பப்பாடசாலை என்ற பெயரில் முன்பு ஆரம்பப் பிரிவில் இயங்கிய கட்டடத்தில் இயங்கவுள்ளது. இவ் ஆரம்பப் பிரிவுக்கான புதிய அதிபரை நியமிக்கும் ஏற்பாடுகளை தென்மராட்சி கல்வி வலயத்தினர் மேற்கொள்ளவுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7-29)

# 27 ஆவது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மணிக்கூட்டுக் கோபுர வீதியில் அமைந்துள்ள கலாலயா பயிற்சியகத்தின் 27 ஆவது ஆண்டுவிழா இன்று காலை 10.30 மணிக்கு கலாலயா மாணவி திருமதி என்.விேனோத் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் விழாநாயகனாக கலாலயா நிறுவுநர் மா.சுதர்சன், பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி நகுலா கணேசலிங்கம், கௌரவவிருந்தினராக நாவலர் கல்வி நிலைய இயக்குநர் எஸ்.குணநாதன், சிறப்பு விருந்தினராக முன்னாள் கலாலயா ஆசிரியை திருமதி ஜெயா ஜோன்சன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

யாழ்.செய்திகள்

# விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்து வந்து மக்களின நலன் கருதி திறக்கப்பட்டிருக்கும் அச்சுவேலி நிவாரணக்கிளை தொடர்பான அவசர விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு அச்சுவேலி, இராசவீதியிலுள்ள தெல்லிப்பழை கிளைக்கு முன்பாக நடைபெறவுள்ளது என வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணச் சங்கத் தலைவர் எம். விநாயக மூர்த்தி அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்திற்கு வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் சமூகம் தருமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் நிவாரணக் கிளையைத் தொடர்ந்து நடத்துவது பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2-7)

# தையல், மனையியல் கண்காட்சி

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் வேலணை பிரதேச செயலர் பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் தையல், மனையியல் கண்காட்சி இன்று காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் சரவணை கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை பிரதேச செயலக பதில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ந. செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், கைதடி கிராம அபிவிருத்தித் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட உத்தியோகத்தர் என்.ஏ.ஜெயராஜன், வேலணைப் பிரதேச ஈழமக்கள் ஜனநாயக கட்சிப் பொறுப்பாளரும் வேலணைப் பிரதேச சபைத் தவிசாளருமான சி.சிவராசா, வேலணை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி. மீரா, கௌரவ விருந்தினர்களாக ஜே/20 கிராம அலுவலர் கா.கணேசலிங்கம், ஜே/21 கிராம அலுவலர் திருமதி இ.பரமேஸ்வரன், சரவணை கிழக்கு கிராம அபிவிருத்தி சங்க உறுப்பினரும் வேலணை பிரதேச சபை உறுப்பினருமான பா. தவபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# இளைஞர்கழகம் அங்குரார்ப்பணம்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் வித்தியாசாலையின் இளைஞர் கழக அங்குரார்ப்பண நிகழ்வு பாடசாலை அதிபர் வே. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ரி. விமல், மாவட்ட சம்மேளன அமைப்பாளர் ச. மதியழகன் ஆகியோர் நடப்பாண்டு நிர்வாகிகளை தெரிவு செய்தனர்.

இதில் தலைவராக பி.பிந்துஜன், செயலாளராக பா. செந்தமிழன், பொருளாளராக த.லுயேக், அமைப்பாளராக கு.கஜீபன், விளையாட்டு து.டிலக்ஷன், கலாசாரம் மு.கவிந்திரன், தொழில் முயற்சி தா.சாந்தரூபி, ஊடகம் சி.லக்ஷனா, தேசிய சேவை த.வினுஜா, கல்வி செ.மயூரிகா, பொறுப்பாசிரியராக வை.பிறேம்குமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என கழகம் அறிவித்துள்ளது. (அ-7-29)

# நாட்டின் சவால்களை சமாளிக்க இளைய தலைமுறை எழுச்சியுற வேண்டும்

## யாழ்.இந்துக் கல்லூரியில் டாக்டர் அப்துல்கலாம் உரை

*மன எழுச்சியடைந்துள்ள இளைஞர்கள் ஒரு நாட்டின் மிகப் பெரிய சொத்து. நாட்டின் சவால்களை சமாளிக்க இளைய தலைமுறை எழுச்சியுற வேண்டும். கல்வி நிறுவனங்கள் மாணவ, மாணவியரின் ஆராயும் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்க்க வேண்டும். அது மாணவர்களின் படைப்புத்திறனை வளர்க்கும் என டாக்டர் அப்துல்கலாம் தெரிவித் துள்ளார்.*

*யாழ். இந்துக் கல்லூரிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த கலாம் அங்கு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.*

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நண்பர்களே யாழ்.இந்து கல்லூரியில் வந்து நூற்றுக்கணக்கான மாணவர்களை சந்தித்து உரையாட கிடைத்த வாய்ப்புக்கு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். 1890 இல் தொடங்கி இன்றைக்கு 122 ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய மிகப்பழம் பெருமை படைத்ததுதான் இந்துக் கல்லூரி. அப்படிப்பட்ட நீண்ட நெடிய பாரம்பரியம் கொண்ட உங்கள் கல்லூரி 121 ஆண்டுகள் கல்விப் பணி செய்துள்ள ஒரு கல்லூரியில் இருக்கும்போது அதன் பெருமை என்ன, அதன் பெருமை என்ன என்று நினைத்துப்பார்த்தேன். நினைக்க, நினைக்க நம் பால்வெளியில் நடக்கும் ஒரு அருமையான நிகழ்ச்சியை பற்றி சொல்ல விரும்புகிறேன். நண்பர்களே உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும் பூமி தன்னைத்தானே சுற்ற 24 மணி நேரமாகும். இரவும் பகலும் நிகழ்கின்றன. அதே பூமி சூரியனை சுற்றுகிறது. ஒரு சுற்று சுற்றுவதற்கு ஒரு வருடம் ஆகிறது. அதாவது உங்கள் இந்து கல்லூரி பூமியில் இருப்பதால் இதுவரை 121 முறை சூரியனை சுற்றி சுழன்று பல மாணவ நட்சத்திரங்களை உருவாக்கியுள்ளது.

நண்பர்களே உங்களது எழுச்சி பெற்ற மனங்களை பார்க்கிறேன். உங்கள் உற்சாகத்தைப் பார்க்கிறேன். நீங்கள் எல்லோரும் வெற்றியடைய, வளமான வாழ்வு பெற வேண்டும்.

பறக்க வேண்டும் என்ற உணர்வு வாழ்வில் பெரிய இலட்சியத்தை அடைய வழிவகுக்கும். அந்த இலட்சியத்தை அடைய என்ன செய்ய வேண்டும். நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை. உன்னால் வெற்றியடைய முடியும்.

*2020 க்குள் வளமான நாட்டை காண்போம்.*

நண்பர்களே உங்கள் அனைவரையும் பார்க்கும்பொழுது எனக்கு ஒரு அனுபவத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். அதைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். Lead India 2020 அமைப்பு ஆச்சார்யா திரு சுதர்சன்ஜீ அவர்களால் ஆந்திர மாநிலத்தில் தொடங்கப்பட்டு இன்றைக்கு கிட்டத்தட்ட 4 மாநிலங்களிலும் வெளி நாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் மத்தியிலும் சிறப்பாக செயற்பட்டு வருகிறது. தொடக்கம் முதல் இன்று வரை ஆச்சார்யா சுதர்சன் தலைமையில் அமைந்த Lead India 2020 என்ற அமைப்பு பல இலட்சக்கணக்கான மாணவர்களைச் சந்தித்து நான் மாணவர்களுக்கு அளித்த 10 உறுதிமொழிகளில் இருந்து சிறப்பு பயிற்சி அளிக்கிறார்கள். அதாவது, உண்மைக்கும் நேர்மைக்கும் எடுத்துக்காட்டாக எப்படி வாழ்வது

✦ கடமை, கண்ணியம், கட்டுப்பாடுடன் எப்படி நடப்பது

✦ அடுத்தவர்களை மதிக்கவும் அடுத்தவர்களை பாராட்டும் பண்பை எப்படி வளர்த்துக் கொள்வது

✦ பெருமையுடன் எப்படி வாழ்வை எதிர் கொள்வது

✦ தன்னம்பிக்கையுடன் எப்படி வாழ்க்கையின் சவால்களை சமாளிப்பது

✦ பேச்சு மற்றும் தொடர்புத்திறனை எப்படி வளர்த்துக்கொள்வது

✦ கூடி உழைத்தால் எப்படி மிகப்பெரிய வெற்றியடையலாம் என்ற தத்துவத்தை புரிய வைப்பது.

✦ கற்பனைத்திறனுடன் கூடியதலைமைப்பண்பை எப்படி வளர்த்துக் கொள்வது என்ற தனித்தன்மையை கற்றுத்தருவது

கோபத்தையும் சோம்பலையும் சுயநல நோக்கையும் வெறுத்தால் எப்படி நாம் எல்லோராலும் விரும்பப்படுவோம், மதிக்கப்படுவோம் என்ற சிறப்பியல்பை கற்றுக் கொடுத்தல்

✦ நீ எனக்கு எதைக் கொடுப்பாய் என்ற எண்ணத்தை மாற்றி என்னால் எதைக் கொடுக்க முடியும் என்ற எண்ணத்தை மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மனதில் விதைத்து அந்த நல்ல குணத்தை வளர்த்தல்

இப்படிப்பட்ட சிறப்பியல்புகளை மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கற்றுக் கொடுத்து அவர்களது வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் முகமாக ஆந்திரா உட்பட பல்வேறு மாநிலங்களில் சிறப்பு பயிற்சி அளித்து கிட்டத்தட்ட 35 முதல் 50 சதவிகித மாற்றத்தை ஏறத்தாழ 10 இலட்சம் மாணவர்கள் மத்தியிலும் ஆயிரக்கணக்கான ஆசிரியர்களிடம் கிட்டத்தட்ட 20 சதவிகித முன்னேற்றத்தையும்கொண்டுவந்ததில் Lead India 2020 அமைப்பு மிகப் பெரும் பங்குவகிக்கிறது.

**மானிடராதல் அரிது**

இந்நேரத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒரு அரும் பெரும் கவிதையின் இலக்கணமாக திகழ்ந்த ஔவையாரின் செய்யுளின் மூலம் ஒரு அருமையான அறக்கருத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

*''அரிது அரிது மானிடராதல் அரிது*
*அதனினும் அரிது கூன் குருடு செவிடு பேடு நீங்கி பிறத்தல்...''*

எனவே, யாழ்.இந்துக் கல்லூரியின் சிறப்பு கல்வி மற்றும் மக்கள் பணி செய்யும் சேவையால், ஆற்றலால் வாகனம் திறந்து வழி விடுமே. அதாவது இலங்கை என்றென்றும் நல்வாழ்வு பெற வாழ்த்துகிறேன்.

**நீ யாராயிருந்தாலும் உழைப்பால், அறிவால் வெற்றியடைவாய்**

நான் ஒரு கிராம சூழ்நிலையில் வளர்ந்தேன், படித்தேன். வளர்ந்தேன் வளர்ந்து கொண்டே இருக்கிறேன். எனது நாட்டில் 75 கோடி மக்கள் 6 இலட்சம் கிராமங்களில் வாழ்கிறார்கள். இளைய சமுதாயம் இங்கு எங்கிருந்தாலும் கிராமத்தில் இருந்தாலும் நகரத்தில் இருந்தாலும் படித்த குடும்பத்தில் இருந்து வந்தாலும் படிக்காத குடும்பத்தில் இருந்து வந்தாலும் உங்களால் வெற்றி அடைய முடியும். என் வாழ்க்கையில் நடந்த ஒரு நிகழ்ச்சியை பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

நான் 5 ஆம் ஆண்டு படிக்கும் போது நானும் என் இனிய நண்பன் ராமசாமி ஐயரும் பக்கத்தில் உட்கார்ந்து இருப்போம். அவரது வீட்டில்தான் மின்சாரம் இருந்தது. பரீட்சைக்கு போகும் போதெல்லாம் அவரது வீட்டில்தான் படிப்பேன். எங்கள் இருவரது குடும்பத்திற்கும் பல்வேறு நிலையில் வேற்றுமைகள் இருந்தாலும் ஓர் ஒற்றுமை எங்களுடைய பெற்றோர்கள் நண்பர்களாக இருந்தார்கள். எனவே, நாங்களும் நண்பர்களாக இருந்தோம். எனவே, நானும் என் நண்பனும் படிப்பிலும் எண்ணங்களிலும் ஒரேவிதமாகச் செயற்பட்டோம்.

1936-40 ஆம் வருடங்களில் படிப்பிற்காக பரீட்சை சமயத்தில் பகல் நேரங்களில் என்னுடைய வீட்டில் நாங்கள் இருவரும் சேர்ந்து படிப்போம். இரவில் அவரது வீட்டில் சேர்ந்து மின்சார ஒளியில் ஒன்றாகப் படிப்போம். படித்து,படித்து முன்னேறினோம்.பல தடைகள் எங்கள் முன்னேற்றத்தை தடுக்கவில்லை. அது எவ்வாறு முடியும்.

என்னுடைய கருத்து என்னவென்றால், உன். உள்ளத்தில் இலட்சிய ஒளி பிரகாசிக்கட்டும், இலட்சியத்தை அடைய அறிவாற்றலை பெருக்கு. அதை அடைய உழைப்பு முக்கியம், உழை, உழைத்துக் கொண்டே இரு. இத்துடன் விடாமுயற்சி உனக்கிருந்தால் நீ யாராக இருந்தாலும் வெற்றி உன்னை வந்து சேரும்.

**வாழ்க்கையின் இலட்சியம்**

மாணவ நண்பர்களே, உங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ன? எத்தனைபேர் Engineer, Doctor ,IAS Officer, Teacher and Enterprenuers ஆக கனவு காணுகிறீர்கள், எத்தனைபேர் விண்வெளியில் நடக்கவும், சந்திரனிலும், செவ்வாய்க் கிரகத்திலும் நடக்க விரும்புகிறீர்கள் எங்கே சொல்லுங்கள் பார்ப்போம்.

கடந்த 12 ஆண்டுகளில், இதுவரை நான் 1.2கோடி இளைஞர்களை சந்தித்து கலந்துரையாடியிருக்கிறேன். அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இருக்கிறேன். அவர்களின் கனவுகளை அறிந்து வைத்திருக்கிறேன். சமீபத்தில் மகாராஷ்டிராவில் உள்ள அமராவதியில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் இளைஞர்கள் கூடிய கூட்டத்தில் எத்தனைபேர் Engineer , Doctor எத்தனை பேர்,IAS/IPS Officer எத்தனை பேர், Teacher எத்தனை பேர், எத்தனைபேர் Entrepreneurஆக போகிறீர்கள் என்று கேட்டேன். சில 100 இளைஞர்கள் கையை தூக்கினார்கள். எத்தனைபேர் சந்திரனுக்கும் வியாழன் கிரகத்திற்கும் போக விரும்பு கிறீர்களா என்று கேட்டேன். அனைவரும் கையைத் தூக்கினார்கள். எத்தனை பேர் நல்ல அரசியல் தலைவர்களாக விரும்புகிறீர்கள் என்று கேட்டேன். 50 இளைஞர்கள் நாங்கள் நல்ல அரசியல் தலைவர்களாக விரும்புகின்றோம் என்றார்கள். அதில் 5 பேரை தேர்ந்தெடுத்து அவர்களிடம் நீங்கள் அரசியல் தலைவரானால் என்ன செய்வீர்கள் என்று கேட்டேன். ஒரு மாணவன் இந்தியாவை 10 ஆண்டுக்குள் வளர்ந்த இந்தியாவாக மாற்றுவேன் என்று சொன்னான். ஒரு மாணவி சொன்னாள், இலஞ்சத்தை ஒழிப்பேன் என்று, இன்னொரு மாணவன்-இளைய சமுதாயத்தை என்னால் முடியும் என்ற நம்பிக்கையைக் கொடுத்து நம்மால் முடியும் என்ற நம்பிக்கையை வளர்ப்பேன், அப்படியென்றால் இந்தியாவால் முடியும் என்ற சூழ்நிலையை உருவாக்குவேன் என்று நம்பிக்கையை கொடுப்பேன் என்று கூறினான். எனவே, மாணவர்களே அப்படிப்பட்ட இலட்சியத்தை யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களாகிய நீங்கள் பெற வேண்டும். நான் எந்த நாட்டுக்கு சென்றாலும் இளைஞர்களிடம் இந்த நம்பிக்கையை, இலட்சியத்தை கனவைப் பார்க்கிறேன்.

இலங்கையிலும் அந்த இலட்சியத்தை கனவை மாணவர்கள் மத்தியில் பார்க்கின்றேன்.

மன எழுச்சியடைந்துள்ள இளைஞர்கள் ஒருநாட்டின் மிகப்பெரியசொத்து. நாட்டின் சவால்களை சமாளிக்க இளைய தலைமுறை எழுச்சியுற வேண்டும். கல்வி நிறுவனங்கள் மாணவ மாணவியரின் ஆராயும் மற்றும் சிந்திக்கும் திறனை வளர்க்க வேண்டும். அவ்வாறு வளர்த்தால் அது மாணவர்களின் படைப்புத்திறனையும் ஆக்கபூர்வமான உற்பத்தி திறனையும் வளர்க்கும். இந்தத் திறமை பெற்ற மாணவர்கள் தன் வாழ்நாள் முழுவதும் தன்னிச்சையாகவே கற்கும் திறனை அடைவர்.



இத்தனையும் தாண்டி நமது நாடு, நமது பாரம்பரியம், நமது நாட்டின் வளம், நமது நாட்டிற்கேற்ற வளர்ச்சி முறை, நாம் அனைவரும் இந்தியர்கள் என்ற ஒற்றுமை உணர்வு, முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்ற பழக்க வழக்கங்கள் இவைகளை அடிப்படையாக கொண்டு இந்தக்கால முறைக்கு ஏற்றாற் போல் நம்மை நாம் அறிவு பூர்வமாக மாற்றி அமைக்க வேண்டும். நாம் நமது முகவரி யை இழக்காமல் நமது மக்களை அறிவார்ந்த சமுதாய மறுமலர்ச்சிக்கு அழைத்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

நாம் வாழ்நாள் முழுவதும் படித்துக் கொண்டிருக்கிறோம். பணி செய்து கொண்டிருக்கிறோம். இவைகளைச் செய்யும்போது நமக்கு வாழ்வில் ஒரு இலட்சியம் வேண்டும். அதாவது நமது எண்ணம் உயர்வாக இருந்தால் அரும்பெரும் இலட்சியங்கள் தோன்றும். பெரும் இலட்சியம் இருந்தால் அருமையான எண்ணம் வரும். எண்ணம் உயர்ந் தால் நம் பணிகள் எல்லாம் உயர்ந்ததாக இருக்கும்.

அறிவு= கற்பனைசக்தி+ மனத்தூய்மை+ உள்ள உறுதி

*கற்பனைச் சக்தி*

கற்றல் கற்பனைச்சக்தியை வளர்க்கிறது. கற்பனை சக்தி சிந்திக்கும் திறனை தூண்டுகிறது,சிந்தனை அறிவை வளர்க்கிறது, அறிவு உன்னை மகானாக்குகிறது,கற்பனைச் சக்தி உருவாவதற்கு குடும்ப சூழ்நிலையும் பள்ளி சூழ்நிலையும்தான் மிக முக்கிய காரணங்களாக அமையும்.

*உள்ள உறுதி*

புதிய எண்ணங்களை உருவாக்கும் உள்ள உறுதி இன்று என்னிடம் மலர்ந் துள்ளன. எனக்கென்று ஒரு புதிய பாதையை உருவாக்கி அதில் பயணம் செய்வேன். முடியாது என்று எல்லோரும் சொல்வதை என்னால் முடியும் என்ற மனஉறுதி என்னிடம் உருவாகி விட்டது

நண்பர்களே உள்ளத்தில் உறுதி வேண்டும் என்று சொன்னேன். எப்படிவரும், யார் மூலம் வரும், நல்ல மனிதர்கள், நல்ல ஆசிரியர்கள், நல்ல புத்தகங்கள் இவைகள் உள்ளத்தில் உறுதிபெற வைக்கும். நாம் எக்காரியத்தையும்செய்யலாம். செய்ய முடியும், செய்து வெற்றி பெற முடியும் என்ற உறுதி யும் நம்பிக்கையும் அளிக்கிறது. மனதில் உறுதி இருந்தால் வெற்றி அடைவீர்கள். நீங்கள் வெற்றி அடைவீர்கள்.

*முடிவுரை*

நான் என்றென்றைக்கும் கொடுத்துக் கொண்டே இருப்பேன் என்ற மனநிலை நம் இளைஞர்களுக்கு வருமென்றால் அந்த மனநிலை எனக்கு வேண்டும். எனக்குத்தான் வேண்டும் என்ற எண்ணத்தை சுட்டெரிக்கும். இளைஞர்களே நீங்கள் எல்லோரும் இப்பணிக்கு தயாரா? வாருங்கள் நண்பர்களே! www.whatcanigive.info என்ற இணையதளத்தில் உங்களை பதிவு செய்து இந்த இயக்கத்தை வழிப்படுத்துங்கள். நீங்கள் என்னுடன் தொடர்பு கொள்ள www.abdulkalam.com என்ற இணைய தளத்தின் மூலம் தொடர்பு கொள்ளலாம் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

# 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்க மஹிந்தவுக்கு ஆணை வழங்கவில்லை

## ஹெல உறுமய தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கம் அறிவித்துள்ள 13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்திற்கு அப்பால் சென்று தீர்வை வழங்க மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் ஆணையை வழங்கவில்லை என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அத்துடன் செனட் சபை அதில் உள்ளடங்கிய அதிகாரங்கள் தொடர்பாக இதுவரை எதனையும் ஜாதிக ஹெல உறுமய அறிந்திருக்கவில்லை என தெரிவித்துள்ள அந்தக் கட்சியின் பேச்சாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க இந்தத் திட்டம் குறித்து அரசாங்கம் இதுவரை தமது கட்சிக்கு தெளிவுபடுத்தவில்லை என கூறியுள்ளார்.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் முன்வந்துள்ள இந்த தீர்வு யோசனை குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஹெல உறுமய தனது கொள்கை மற்றும் நிலைப்பாடுகளை தெளிவுபடுத்த எண்ணியுள்ளதாகவும் வர்ணசிங்க கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஏற்படுத்திக் கொள்ளும் இணக்கம் தொடர்பில் மக்களின் விருப்பத்தைஅறிந்துகொள்ளஅதனை மக்கள் முன்வைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேவேளை செனட் சபை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமயவுடன் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. எனினும் முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தை ஒன்றின் போது காணி மற்றும் காவற்றுறை அதிகாரங்கள் இன்றிய மாகாண சபை ஆட்சி அதிகாரத்தை வடக்கு, கிழக்குக்கு வழங்குவது தொடர்பான யோசனையை ஜனாதிபதி முன்வைத்திருந்ததாகவும் வர்ணசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## மஹோற்சவம்

வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு ஸ்ரீஅரசடி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.

இத்திருவிழா உற்சவமானது தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி 10.15 மணிக்கு வசந்தமண்டபப்பூசை இடம்பெற்று சுவாமி திருவீதியுலா இடம்பெறும். மாலை 4.45 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி 6 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி வீதியுலா இடம்பெறும் எனவும் தேர்த் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி 6 ஆம் திகதி நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7)

# இராமேஸ்வரம் மீனவர்கள் மீது கடற்படை பெற்றோல் குண்டு வீச்சு

## 5 மீனவர்கள் படுகாயம்; பொருட்கள் சேதம்

(மண்டபம்)

இராமேஸ்வரத்தில் இரு ந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது நடுக்கடலில் இலங்கை மீனவர்கள் திடீ ரென பெற்றோல் குண்டுகளை வீசி தாக்கினர்.

இதில் 5 மீனவர்கள் படுகாயம் அடைந்தனர். 2 படகுகள், வலைகள், மீன்பிடி சாதனங்கள் சேதமடைந்தன. இச் சம்பவம் இராமேஸ்வரத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

இராமேஸ்வரத்தில் இரு ந்து நேற்று முன்தினம் காலை விசைப் படகுகளில் மீனவர்கள் கடலுக்கு சென்று கச்ச தீவு அருகேமீன்பிடித்து கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த இலங்கை கடற்படை மீனவர்களை விரட்டியடித்தது

சிதறி ஓடிய மீனவர்கள் சற்று தள்ளி வந்து மீண்டும் மீன்பிடிக்கத் தொடங்கினர். அங்கு இரண்டு படகுகளில் இலங்கை மீனவர்கள் வந்தனர்.

இப்பகுதியில் நீங்கள் மீன்பிடிக்கக்கூடாது என்று கூறினர். அப்போது இருதரப் பினரிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. ஆத்திரமடைந்த இலங்கை மீனவர்கள், இராமேஸ்வரம் மீனவர்களின் மீது திடீரென பெற்றோல் குண்டுகளை வீசினர்.

படகுகளில் விழுந்த குண்டுகள் வெடித்து தீப்பிடித்தது. குண்டு வீச்சில் ஒரு படகு எரிந்து சேதமடைந்தது. மற்றொரு படகில் இருந்த வலைகள் முழுவதும் எரிந்தது. ஐந்துக்கும் அதிகமான தமிழக மீனவர்கள் படுகாயம் அடை ந்தனர்.

இதனால் மீனவர்கள் மீன் பிடிக்காமல் நேற்று முன்தினம் இரவே கரை திரும்பிவிட்டனர். மீனவர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தால் இராமேஸ்வரத்தில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கரை திரும்பிய சில மீனவர்கள் கூறுகையில், வழக்கமாக தமிழக மீனவர்களை இலங்கை கடற்படை தான் தாக்கி சித்திரவதைப்படுத்துவர்.


கற்களை எடுத்து வந்து வீசி ரவுடிகள் போல் செயற்படுவர். ஆனால், நேற்று முன்தினம் இலங்கை மீனவர்கள் வந்து தாக்கினர். பேசிக் கொண்டிருந்தபோதே அவர்கள் எங்கள் மீது பெற்றோல் குண்டுகளை வீசினர்.

கடலுக்கு செல்லும் போதெல்லாம் பிரச்சினை செய்கின்றனர். இதனால் எங்கள் குடும்பங்கள் பட்டினி கிடந்து சாக வேண்டிய நிலை ஏற்பட்டுள் ளது என்றார். (அ-2)

## முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீசிவகாமிசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமான் கோயிலில் திருமுறை முற்றோதல் கடந்த 15 ஆம் திகதி தைப் பொங்கல் தினத்தில் தொடங்கி அதிகாலை 5.30 மணி தொடக்கம் காலை 7.30 மணிவரையும் தினமும் நடை பெற்று வருகின்றது என யாழ்ப் பாணம் இந்து சமயப் பேரவை அறிவித்துள்ளது. (அ)



யாழ். போதனா வைத்தியசாலைக்கு கனேடிய அபிவிருத்திச் சங்கம் வழங்கிய வைத்திய உபகரணங்களினை கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இலங்கைக்காக கனேடியத் தூதுவர் புரூஸ் லெவியை வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் வைத்திய நிபுணர்கள் அழைத்து வரப்படுவதையும் கையளிக்கப்பட்ட உபகரணங்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- உ.சாளீன்)

# தப்லீக் ஜமா அத் இயக்கத்தவர்களின் சிபாரிசுடன் வருவோருக்கு விசா

## முஸ்லிம் சமய விவகார திணைக்கள பணிப்பாளர்

(கொழும்பு)

இலங்கையில் முஸ்லிம்களுக்கு இஸ்லாம் குறித்த போதனைகளைநடத்துவதற்கு இலங்கை வரும் தப்லீக் ஜமா அத் இயக்கத்தவர்கள், கிராண்ட்பாசிலுள்ள அதன் தலைமையகமான மர்கசின் சிபாரிசுடன் வந்தால் விசா வழங்குவது என இணக்கம் காணப்பட்டதாக முஸ்லிம் சமய விவகார திணைக்கள பணிப்பாளர் அஷ்ஷெய்க் வை. எம். எல்.நவவி தெரிவித்தார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூலானந்த பெரேரா தலைமையில் நேற்று முன்தினம் நண்பகல் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தப்லீக் ஜமா அத் அமைப்பு நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு என்றமையால் குறித்த அமைப்பின் சிபாரிசுடன் வருபவர்களுக்கு விசா வழங்கப்படும் என பணிப்பாளர் நவவி கூறினார்.

போதனைகளை நடத்துவதற்கு இலங்கை வரும் தப்லீக் ஜமா அத் இயக்கத்தவர்கள் தங்கியிருக்கும் பிரதேசங்கள் மற்றும் கால எல்லை தொடர்பில் குடிவரசு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். (அ-2)

# கிளி. மாவட்டத்தில் வழிப்பறி கொள்ளையர்கள் அதிகரிப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மோட்டார் சைக்கிள் மூலம் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபடுவோரின் தொகை அதிகரித்து காணப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் அண்மையில் இடம்பெற்றுள்ளன.

திருமுறிகண்டி, ஆனைவிழுந்தான் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரிடம் கறுப்பு தலைக்கவசம் அணிந்த இரு கொள்ளையர்கள் எட்டு பவுண் பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளனர்.

அத்தோடு கிளி.கனகபுரம் வீதியில் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் பெண் ஒருவரிடம் 1 1/2 பவுண் சங்கிலியொன்று பறித்துச் செல்லப்பட்டுள்ளது.

இக்குறிப்பிட்ட சம்பவங்கள் தொடர்பாக கிளி.மாவட்ட பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு பொறுப்பதிகாரி எம்.எல்.அறிபுடீன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

கிளிநொச்சி பொலிஸார் புலன் விசாரணை செய்து வருகின்றனர் எனவும் இக்கொள்ளைச் சம்பவங்களை இல்லாதொழிக்க தாம் பொதுமக்களிடம் இருந்தும் இளைஞர்களிடமிருந்தும் கொள்ளையர்கள் பற்றிய தகவல்களை எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பான தகவல்களை 0775524746 எனும் தொலைபேசி என்னுடன் தொடர்பு கொண்டு வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-7-15)


கண்ணீர் அஞ்சலி



பொன்னப்பா தம்பிராசா

எமது பாடசாலையின் ஆசிரியர் த. விக்கினேஸ்வரன் அவர்களின்
பாசமிகு தந்தையார்
பொன்னப்பா தம்பிராசா
அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து மனம் வருந்துகின்றோம்.
அன்னாரின் ஆத்மா இறைவனடி சேர இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்
யா/ இடைக்காடு மகா வித்தியாலயம்,
அச்சுவேலி.

(7359)

# பொன்சேகா கொல்லப்படுவார் பசில் ராஜபக்ஷ கூறினாராம்?

## விக்கிலீக்ஸ் தகவல்

முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா படுகொலை செய்யப்படுவார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தனுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர் பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார் என விக்கிலீக்ஸ் தகவல் தெரிவித்துள்ளது.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளின் காதுகளுக்கு இத்தகவலை போட்டு வைத்திருந்தார் சம்பந்தன்.

கடந்த 2009ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதி சம்பந்தருக்கும் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கும் இடையில் சந்திப்பு ஒன்று இடம்பெற்று இருந்தது.

ஜனாதிபதித் தேர்தல் குறித்துப் பேசியிருந்தனர். மஹிந்தவுக்குப் போட்டியாக பொன்சேகா களத்தில் இறங்குவார் என்றும் இதற்காக முப்படைத் தளபதி பதவியை இராஜினாமாச் செய்வார் என்றும் சொல்லியிருக்கின்றார் சம்பந்தன்.

தேர்தல் விவகாரம் சூடுபிடிக்கின்ற நிலையில் தமிழ்க் கூட்டமைப்பை மஹிந்த பேச அழைத்திருந்தார் என்றும் கூறியிருக்கின்றார்.

பசில் ராஜபக்ஷவுடன் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார் என்றும் பொன்சேகா கொல்லப்படுவார் என்று அச்சந்திப்பில் பசில் சொல்லியிருந்தார் என்றும் சம்பந்தன் தூதரக அதிகாரிகளுக்கு குறிப்பிட்டிருக்கின்றார்.

தூதரகத்திலிருந்து கடந்த 2009 ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் திகதி அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட இராஜதந்திர ஆவணம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ-2)

# வெளிப்படை இல்லையேல் மத்தியஸ்தத்தில் பலனில்லை

## ஜயலத் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழர் விவகாரம் தொடர்பில் அரசியல் தீர்வினை முன்வைப்பதற்கு அரசாங்கத்திடம் நேர்மையானதும் வெளிப்படைத்தன்மையானதுமான நோக்கு இல்லையேல் கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தைகளில் சர்வதேசமே மத்தியஸ்தம் வகித்தாலும் எதுவும் நடந்து விடப்போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

விரும்பினாலோ விரும்பாவிட்டாலோ தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு வடக்கு, கிழக்கு தமிழர்களின் ஏகபிரதிநிதிக்கட்சியாகும்.

எனவே அரசாங்கம் தமிழர் விவகாரம் தொடர்பில் முரண்பாடுகளைக் களைந்து தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் தொடர்ந்தும் பேச்சுக்களை முன்னெடுத்து இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்குமாறும் அக்கட்சியின் பிரதிச் செயலாளரும் கம்பஹா மாவட்ட எம்.பி.யுமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். (அ-2)

# 6 ஆயிரம் மக்கள் மட்டுமே இன்னும் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்

## பிரதியமைச்சர் முரளிதரன்

(கொழும்பு)

இன்னும் 6ஆயிரம் பேரை மாத்திரம் மீள்குடியேற்ற வேண்டியுள்ளது. அவர்களையும் மிகவிரைவில் மீள்குடியேற்றுவோம் என மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற புனர்வாழ்வளிக்கப்பட்ட இளைஞர், யுவதிகளை விடுதலை செய்து அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கும் போதே பிரதியமைச்சர் முரளிதரன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த 12 ஆயிரம் இளைஞர், யுவதிகள் சரணடைந்தார்கள்.

அதில் இதுவரைக்கும் 10 ஆயிரத்து 175 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்டு அவர்களின் குடும்ப உறவினர்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பேரிலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினது வழிகாட்டலிலும் இந்த நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருகின்றது.

இறுதி யுத்தத்தின் போது சரணடைந்தவர்கள் தொடர்பாக அவர்களுக்கு புனர்வாழ்வு வழ்ங்குவது பற்றி ஆலோசணை வழங்கும் கூட்டத்திற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன்.

அக்கூட்டத்தில் எனது ஆலோசனையும் ஜனாதிபதியினால் பெறப்பட்டது. இதன் பின்னரே புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

இன்று 73 பேர் விடுதலை செய்யப்படுகின்றனர். அதேபோன்று எஞ்சியுள்ளவர்களும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு பின்னர் புனர்வாழ்வளிக்கப்படுவர்.

இன்று அரசாங்கம் இதற்கென்று ஒரு அமைச்சரை நியமித்துள்ளது. இதற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர் ஒரு சிறந்த அமைச்சராவார்.

அமைச்சர் சந்திரசிறி கஜதீர இந்த அமைப்பினை பொறுப்பேற்ற பின்னர் தான் இந்த அமைச்சு சிறப்பாக இயங்குகின்றது.

உலகில் எங்குமே இல்லாதவாறு இலங்கை அரசாங்கம் இந்த இளைஞர், யுவதிகளின் விடயத்தில் கரிசனை காட்டி செயற்பட்டு மனிதாபிமான நடவடிக்கையை மேற்கொண்டு துரிதமாக விடுதலை செய்துள்ளது.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளை எடுத்துக் கொண்டால் அங்குள்ள கைதிகள் சிறைகளில் சித்திரவதை செய்யப்படுவதும் கொல்லப்படும் நிலையும் உள்ளது.

ஆனால் அந்த நிலையும் இங்கு இல்லை. மிகவும் மனிதாபிமானத்துடன் இந்த இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதாரத்திற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (அ -2)

# சந்தேக நபர் கைது

(கொழும்பு)

கொழும்பு பாலத்துறை பகுதி வீடொன்றிற்குள் நுழைந்து சுமார் 150 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டதாக சந்தேகிக்கப்படும் படைவீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் தம்பதெனிய பகுதிக்கு தப்பிச் சென்றிருந்த சமயம் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2)

# கிளித்தட்டு போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்திற்குட்பட்ட விளையாட்டு கழகங்களிடையேயான கிளித்தட்டு சுற்றுப்போட்டியை நடத்த கைதடி மேற்கு சரஸ்வதி விளையாட்டு கழகத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அவைச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (அ-7-29)

# அரசியல் தீர்வு தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன -கரு கேள்வி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் பிரதித்தலைவர் கரு ஜயசூரிய நேற்றையதினம் கிருலப்பனை பிரதேசத்தில் அரசியல் அலுவலகம் ஒன்றை திறந்து வைத்துள்ளார்.

இதன்போது உரையாற்றிய அவர்,

சிலர் தம்மை அரசியலில் இருந்து விலக்குவதற்கு முயற்சிப்பதாகவும் எனினும் தம்மை மக்களால் மாத்திரமே அரசியலில் இருந்து வெளியேற்ற முடியும் எனவும் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேசியப்பிரச்சினைக்கு பெற்றுக் கொடுக்கப்படும் அரசியல் தீர்வு தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு வெளியிடப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சி கோரியுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஊடக பேச்சாளர் கயந்த கருணாதிலக்க இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதுவரை பல்வேறுபட்ட கருத்துக்கள் வெளியிடப்படுகின்ற பொழுதிலும் அரசியல்தீர்வு தொடர்பாக உத்தியோகபூர்வ கருத்து வெளியிடப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அனல் மின்நிலையம் செயலிழப்பு

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின்நிலையம் மீண்டும் ஒரு முறை செயலிழந்துள்ளது. இதனை மீண்டும் இயல்பு நிலைக்கு கொண்டு வர பல நாட்கள் செல்லும் என இலங்கை மின்சார சபையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக பல தடவைகள் நுரைச்சோலை அனல்மின் நிலைய தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இதனிடையே மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய இலங்கை மின்சாரசபை முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக நாளொன்றிற்கு 10 இலட்சத்து 80 ரூபா வீதம் செலவிட நேர்ந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)





யாழ்/ நல்லூர் சென்வெனடிக்ற் வித்தியாலய தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள்விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் எம். இராதாகிருஸ்ணன், சிறப்பு விருந்தினராக அருட்சகோதரி குயின்ரன் பெர்னாண்டோ, பாடசாலை அதிபர் அருட்சகோதரி எம். ஞானதர்சினி ஆகியோருடன் விழா நாயகர்கள் நிற்பதையும் மாணவர்களின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

# அமைதியான வாழ்வு தரும்

# ஆன்மீகக் குறிப்புகள்!

### கதவுக்கு உகந்த மரங்கள்

மா, வேம்பு, பலா, தேக்கு, மஞ்சள், கடம்பு, ரோஸ்வுட் ஆகிய மரங்கள் கதவு செய்ய சிறந்த மரங்களாகும். கதவு மற்றும் அதைச் சுற்றியுள்ள நிலையை ஒரே மரத்தில் அமைக்க வேண்டும்.

வேறு வேறு மரங்களில் அமைக்கக்கூடாது. மேலும் தலைவாசலில் வைக்கப்படும் வாசற்காலின் நான்கு புறமும் சட்டம் இருக்க வேண்டும். தற்காலத்தில் ஆடம்பரம் கருதி தரைப் பகுதியில் சட்டம் அமைக்காமல் விட்டுவிடுகிறார்கள். இது தவறு. சட்டம் இருந்தால் செல்வம் உயரும். பணப்புழக்கம் ஏற்படும். தீய சக்திகள் நெருங்காது.

### ஆசை பூர்த்தி அடைய...




பரணியில் பிறந்தவர்கள் தங்கள் ஆசையை பூர்த்தி செய்ய பரணி நட்சத்திரத்தன்று காலை முதல் மாலைக்குள் இருபத்தொரு கோயில்களில் நெய் தீபம் ஏற்ற வேண்டும். ஒரு தீபம் அல்லது மூன்று தீபங்கள் ஏற்றலாம். புது மண்ணில் செய்யப்பட்ட அகல்விளக்கில் பஞ்சு திரிகளை போட்டு நெய் விளக்கு ஏற்ற வேண்டும். எந்தக் கோயிலாக இருந்தாலும் பரவாயில்லை.

### நினைத்தது நிறைவேற...

மிருகசீரிட நட்சத்திரத்தன்று ஐந்து மகா கணபதி ஆலயங்கள் சென்று அறுகம்புல் மாலை சாற்றி அர்ச்சனை செய்து நெய் விளக்கு ஏற்றி வழிபட வேண்டும். அவ்வாறு வழிபட்டால் நினைத்தது நிறைவேறும்.

### கணனித்துறையில் சிறந்து விளங்க...

பொறியியலாளர்கள் தங்கள் பணியில் சிறந்து விளங்க துவாதசி திதி அன்று சிவன் கோயிலுக்குச் சென்று மூன்று அகல் விளக்கில் நெய் ஊற்றி விளக்கேற்றி பின்பு பதினொரு முறை பிரகாரம் சுற்ற வேண்டும். பின்னர் தேங்காய் சோறு விநியோகம் செய்தால் தங்கள் துறையில் மென்மேலும் சிறப்படைவார்கள்.

### புத்திர தோஷம் நீங்க...

அஷ்டமி முடிந்து நவமி ஆரம்பிக்கும் நேரத்தில் அரச மரத்தடியில் பசும் பாலில் சிறிதளவு தேன் கலந்து ஊற்றி வழிபட்டு வந்தால் புத்திர தோஷம் நீங்கும். தேய்பிறை மற்றும் வளர்பிறை ஆகிய இரண்டு காலங்களிலும் செய்யலாம்.

### வறுமை நீங்க...

ஒவ்வொரு நாளும் காலை ஆறு மணி முதல் ஏழு மணிக்குள் அருகில் உள்ள ஓர் ஆலயத்தின் கோபுர தரிசனம் செய்து வந்தால் எப்பேர்ப்பட்ட வறுமையும் காலப்போக்கில் நீங்கும்.

### குழந்தையின் ஆயுள் விருத்தியாக...

நல்ல முறையில் குழந்தை பிறந்து அந்தக் குழந்தையை வளர்த்துவருபவர்கள் தங்கள் குழந்தையின் ஆயுள் பற்றியும் முன்னேற்றம் பற்றியும் கவலை இருந்தால் தங்கள் குழந்தையின் வயதுக்கு ஒத்த குழந்தைகளின் முன்னேற்றத்துக்கு வேண்டிய உதவிகளையும் மேலும் அவர்களின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான உதவியையும் செய்தால் உங்கள் குழந்தையின் கண்டம் நீங்கி முன்னேற்றம் உண்டாகும்.

### கல்வித்தடை நீங்க...

புதன்கிழமை அன்று வைரவருக்கு மரிக்கொழுந்து மாலை சாற்றி அர்ச்சனை செய்யுங்கள். இல்லம் திரும்பிய பின்னர் பாசிப்பருப்பு பாயாசம், பாசிப்பருப்பு கலந்த அன்னத்தை படையலிட்டு பூஜை அறையில் வைரவருக்கு உரிய மூல மந்திரங்களை கூறி வழிபட்டால் படிப்படியாக தடைகள் அகலும்.

### மாங்கல்ய தோஷம் விலக...

பெண் ஜாதகத்தில் மாங்கல்ய தோஷம் இருந்தால் ஆயுள் குறைவாக உள்ள கணவர் தான் அமைவார் என்பது கூற்று. இந்த மாங்கல்ய தோஷம் விலக செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 10.30 மணிவரை (எமகண்டம்) வைரவருக்கு சந்தனக்காப்பு, மஞ்சள் வஸ்திரம் சாற்றி சர்க்கரை பொங்கல் மற்றும் பால் பாயாசம் நெய்வேத்தியம் செய்ய வேண்டும்.



மேலும் பெண்களுக்கு மஞ்சள் குங்குமத்துடன் வஸ்திர தானம் செய்வதும் நல்ல பலனைக் கொடுக்கும்.

### சனீஸ்வரரை வழிபடும் முறை...

வில்வ இலைகளை நன்கு காய வைத்து பொடியாக்கி வெள்ளை நிற துணியில் சிறு மூட்டைகளாக கட்டி வைத்துக் கொள்ளுங்கள்.

பின்னர் சனிக்கிழமை அன்று சனீஸ்வர பகவானுக்கு புது மண்ணால் செய்யப்பட்ட அகல் விளக்கில் நல்லெண்ணெய் விட்டு (வில்வப் பொடி) மூட்டைகளில் ஒன்றை திரியாக கொண்டு விளக்கேற்றுங்கள். தொடர்ந்து இப்படி செய்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

### ஏழரைச்சனி நடப்பவர்களுக்கு

உணவில் பாகற்காய், வல்லாரைக்கீரை, சுண்டங்காய், அகத்திக்கீரை, இவைகளைச் சேர்த்துக் கொள்வதால் இன்னல்கள் குறையும். குறிப்பாக திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில் இவற்றை உணவில் சேர்த்துக் கொண்டால் கூடுதல் பலன் கிடைக்கும். (முற்றும்)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## கசகசா

**Botanical Name- Papaver somniferum**
**Family- Papaveraceae**
**Eng-Poppy seeds**
**Sinh- Gashasha**

ஓராண்டு வாழக்கூடிய செடி கிளைகளையுடையது. உருளைவடிவ தண்டுடையது. கிட்டத்தட்ட 90 சென்ரிமீற்றர் உயரமுடையது. இலைகள் ஒன்றுவிட்ட இலையமைப்பையுடையது. இலை விளிம்புகள் அரிவாள் வடிவ அமைப்புடையது. கோள வடிவ பழங்கள் 3.7தொடக்கம் 7.5 சென்ரிமீற்றர் விட்டமுடையது. பழங்களுள் நிறைய விதைகள் காணப்படும். சிறுநீரக வடிவ சிறிய விதைகளாகும். பூக்கள் ஆடிமாதத்தில் மலர்ந்திருக்கும்.

குறிப்பு:- அபின் செடியின் காய் போஸ்தக்காய் என அழைக்கப்படும். ஓரளவு முதிர்ந்த பழத்தினை நீளப்பாக்கால் மேலாக கீறுவதால் வடியும் பால் தான் அபின் எனப்படும். இவ் அபின் நச்சுத்தன்மையுடையது. ஆனாலும் சுதேச மருத்துவத்தில் சரியான முறையில் சுத்திகரிக்கப்பட்டு மருந்துகளில் சேர்க்கப்படுகின்றது.


அபின் செடியானது இலங்கையில் பயிரிடப்படுவது தடைசெய்யப்பட்டுள்ளது. கடல் மட்டத்திலிருந்து 7,500 அடி உயரப்பகுதிகளில் நீலகிரி மாவட்டத்தில் இந்தியாவில் பயிரிடப்படுகின்றது.

ஆனாலும் இதன் விதைகள் கசகசா என அழைக்கப்படும். இலை நச்சுத்தன்மை முற்றிலும் இல்லாதவை. உணவில், அழகு சாதன பொருட்கள், மருந்துகள், மென்பானங்களில் கசகசா சேர்க்கப்படுகின்றது. கசகசா விதைகளை உலர் சரக்காக தமிழ்மருந்துக் கடை களில் பெற்றுக் கொள்ளலாம்.

### மருத்துவ குணங்கள்

கோடையின் புழுக்கத்தால் ஏற்படும் தோல் அரிப்பிற்கு சிறந்த பூச்சுமருந்து கசகசா.

கசகசா 3 அல்லது 4 தேக்கரண்டி எடுத்து முதல் நாளே நீரில் ஊற வைத்து காலையில் எடுத்து அரைத்து தயிரில் அல்லது வடித்த கஞ்சியில் கலக்கி உடலில் தேய்த்து குளிப்பதால் அரிப்பு குறையும். அழகு மேனி உண்டாகும். கசகசாவுடன் பாசிப்பயறு சேர்த்தும் தயாரிக்கலாம். நல்ல பலன் கிடைக்கும்.



### கசகசா பாயாசம்

கசகசா 15 கிராம் ஊறவைத்து அம்மியில் அரைத்து பிசைந்து நீர் சேர்த்து 1/2 லீற்றர் பால் பிழிந்து எடுத்து அடுப்பிலேற்றிக் காய்ச்சவும். 3 கொதி வந்ததும் தேன் 350 கிராம் சேர்த்து காய்ச்சி பாகுபதத்தில் இறக்கவும். இந்தப்பாயாசத்தை அடிக்கடி உண்டு வந்தால் தாதுபுஷ்டி, தோல் பளபளப்பு இதிலிருந்து உண்டாகும். தேகச் சூடு தணியும். தேக வெளுப்பு மாறும்.

### கசகசா லேகியம்

கசகசா, கற்கண்டு, வால்மிளகு, தோல் நீக்கிய பாதாம்பருப்பு ஆகியவைகளை சம அளவாக எடுத்து இடித்து அரித்து பின்பு அம்மியில் வைத்து அரைத்து தேவையான அளவு தேன், நெய் சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். 2 தேக்கரண்டி 3 வேளை சாப்பிட கழிச்சல், இரத்த மூலம், சீதபேதி குணமாகும்.

### தாய்ப்பால் பெருக்க

பாதாம்பருப்பு 5 முதல் 10, கசகசா 1/2 தேக்கரண்டி இரண்டையும் சேர்த்து அரைத்து பசும்பாலில் கலந்து காய்ச்சி சாப்பிட தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும்.


கசகசாவை (10 கிராம்) மாதுளம்பழச்சாறு 60 மில்லியில் ஊறவைத்து அரைத்துச் சாப்பிட்டால் தூக்கமின்மை பிரச்சினை தீரும்.

கசகசா, பூனைக்காலிவிதை (தமிழ்மருந்துக் கடையில் பெற்றுக் கொள்ளலாம்) இரண்டையும் முறையே தலா 100 கிராம் எடுத்து அரைத்துக்கொள்ளவும். இதில் 5 கிராம் பொடியை தினமும் பாலில் கலந்து இரவில் குடித்துவந்தால் நரம்புத்தளர்ச்சி குணமாகும். (தொடரும்)

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம் கைதடி

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 20






3-வது, 4-வது, 5-வது பிரெஞ்சுப் படைகளை-மொத்தமாக 39 டிவிஷன்கள்-உள்ளடக்கியிருந்த 2-வது படைத்தொகுதி ஜெனரல் பிரேட்டல் தலைமையின் கீழ் பெரும்பாலும் பிரெஞ்சு-ஜேர்மன் எல்லையில் மஜினோ எல்லைக் கோட்டைப் பாதுகாத்துவந்தது.

6-வது, 8-வது பிரெஞ்சுப் படைகளை- மொத்தமாக 11 டிவிஷன்கள் -உள்ளடக்கிய 3-வது படைத் தொகுதி தளபதி ஜெனரல் பெஸ்ஸோன் ரைனின் மேற்பகுதியிலும் ஸ்விட்சர்லாந்துடனான எல்லையிலும் தற்காப்பாக நின்றது. மூன்று படைத் தொகுதிகளும் ஜெனரல் ஜார்ஜின் தலைமையின் கீழ் வடகிழக்கு சேனையாக ஒன்றிணைக்கப்பட்டன.

17டிவிஷன்கள் சேம இருப்பில் இருந்தன, பிரெஞ்சுத் தரைப் படைகளின் தலைமைத் தளபதியாகிய ஜெனரல் காமெலேனின் பொறுப்பில் 6டிவிஷன்கள் எஞ்சியிருந்தன.

ஹாலந்து இராணுவத்திடம் 10 டிவிஷன்களும் 124 விமானங் களும் இருந்தன. நாட்டின் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களைத் தற்காத்து நிற்பது மட்டுமே இதன் கடமையாக இருந்தது. பெல்ஜிய இராணுவத்திடம் 23 டிவிஷன்களும் 410 விமானங்களும் இருந்தன. பலப்படுத்தப்பட்ட பிரதேசங்களை ஆதாரமாகக் கொண்டு, நேச நாட்டுத் துருப்புக்கள் வரும் வரை பாசிசத் துருப்புக்களை தடுத்து நிறுத்தும் கடமை இதன் முன் வைக்கப்பட்டது.

தாக்குதலுக்காக தயாராகி வந்த காலகட்டத்தில் பாசிச ஜேர்மனியப் படைத்தலைமை திடீர் நடவடிக்கைளில் இறங்குவதன் மீது பெரும் கவனம் செலுத்தியது. இந்த நோக்கத்தோடு உருமாற்ற நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. உதாரணமாக, அர்டேன்னி வழியாக புலோன் மீது முக்கிய தாக்குதல் தொடுக்கத் திட்ட மிட்டிருந்தாலும் இது லியேஸ் மீது தொடுக்கப்படும் என்று நேச நாட்டவரை எண்ணவைக்க முடிந்தது.

கூடிய விரைவில் மேற்கே தாக்குதலைத் தொடுக்க ஜேர்மனியர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள் என்பது பற்றிய விவரங்கள் நேசநாடுகளின் வேவு ஸ்தாபனங்களுக்கு கிடைத்திருந்தாலும் தமது துருப்புக்களின் யுத்த தயார் நிலையை மேம்படுத்த இவை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே ஜேர்மனியின் தாக்குதல் நேச நாட்டுத் துருப்புக்கள் எதிர்பாரா வண்ணமாக அமைந்தன. மே 10 ஆம் திகதி அதிகாலை பாசிச ஜேர்மனியத் துருப்புகளுக்கு ஹிட்லரின் அறைகூவல் வாசிக்கப்பட்டது. இதில் பிரிட்டனும் பிரான்சும் துரோகக் கொள்கையை கடைப்பிடிப்பதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. "இன்று தொடக்கம் சுமார் அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு ஜேர்மன் இனத்தின் விதியை நிர்ணயிக்கும்" என்று அறிவிக்கப்பட்டது. காலை 5மணி 30 நிமிடத்திற்கு சுமார் 2000 பாசிச ஜேர்மனிய விமானங்கள் 70 பிரெஞ்சு பெல்ஜிய, ஹாலந்து விமானத் தளங்களின்மீது திடீரென குண்டுமழை பொழிந்தன. ஆத்திரமூட்டும் நோக்கங்களுக்காக பாசிச விமானங்கள் ஜேர்மன் நகராகிய ஃபிரைபுர்கின் மீதும் குண்டுகளை வீசின. இந்த குண்டுவீச்சு பெல்ஜிய, ஹாலந்து விமானப் படையால் நடத்தப்பட்டதாக ஹிட்டலரின் பிரச்சார இயந்திரம் குற்றம் சாட்டியது. அதே நேரத்தில் சுமார் 4000 பாசிச பாரசூட் படையினர் ஹேக், ரோட்டர்டாம் பிரதேசங்களில் இறக்கப்பட்டனர். ஒருசில விமானங்களைக் கைப்பற்றிய இவர்கள் 22ஆயிரம் வான் இறக்குப் படைப்பிரிவுகள் தரையிறங்க வழிகோலினர். இது தவிர ஹிட்லரின் பாரசூட் படையினர் ஹாலந்து மாஸ் ஆற்றின் குறுக்கேயிருந்த மிகமுக்கிய பாலங்களை கைப்பற்றி தமது டாங்கிப் படைகள் வரும்வரை வைத் திருந்தனர். பெல்ஜியத்தில் அல்பெர்ட் கால்வாயின் குறுக்கேயிருந்த இரண்டு பாலங்களைக் கைப்பற்றி, 6-வது பாசிச ஜேர்மனிப் படை வடக்கேயிருந்த லியேஸைச் சுற்றிவரவும் 16-வது டாங்கி கோர்பஸ் செயற்படுவதற்கான திறந்தவெளிக்கு வரவும் வகை செய்தனர்.


மே 12 ஆம் திகதி 18-வது ஜேர் மனியப் படையின் டாங்கி படைப் பிரிவுகள் ரோட்டர்டாம் பிரதேசத்தில் தமது வான் இறக்குப் படையுடன் இணைந்தன. இரண்டு நாட்கள் கழித்து ஹாலந்து சரணடைந்தது, இதன் இராணுவம் எதிர்ப்பை நிறுத்தியது. வில்ஹெல் மினா அரசியும் ஹாலந்து அரசாங்கமும் லண்டனுக்கு நாடு பெயர்ந் தனர்.

ஜேர்மனியர்கள் முக்கிய தாக்குதல் திசையிலும்"A" படைத் தொகுதியின் போர் நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடந்துவந்தன. இவை அர்டேன்னியைக் கடந்து பெல்ஜியப்பரப்பின் வழியே சென்று மே12 ஆம் திகதி வாக்கில் பிரெஞ்சு நகரும் கோட்டையுமாகிய செடானைக் கைப்பற்றின. டாங்கிப்பிரிவு முன்னால் செல்ல வலப்புறமிருந்து இதை 15-வது விசேட காலாட்படை டிவிசன்கள் செயற்பட்டன. ஜெனரல் கிளைஸ்டின் டாங்கிப் பிரிவு செடான் பிரதேசத்தில் 9-வது பிரெஞ்சுப் படையின் தற்காப்பை உடைத்துக் கொண்டு, மே 13 ஆம் திகதி மூன்று திசைகளில் மாஸ் ஆற்றைக் கடந்து லாமான்ஷை நோக்கி விரைந்தது. மே 20 ஆம் திகதி இப்பிரிவு கரையோரத்தை அடைந்தது.

இதன் பின்னால் 12-வது படைகள் வலப்புறம் 4-வது படையும் இடப்புறம் 16-வது படையும் சென்றன. இரண்டு நாட்களுக்குப் பின் டாங்கிப் பிரிவு புலோனையும் அடுத்த நாள் காலேயையும் கைப்பற்றியது. இதன் விளைவாய் பெல்ஜியத்திலும் வடக்குப் பிரான்சிலும் இருந்த பிரிட்டிஷ்-பிரெஞ்சுத் துருப்புக்கள் தமது பின்னணிகளிலி ருந்து துண்டிக்கப்பட்டன. ஹிட்லர் படையினரின் தாக்குதலைத் தடுத்து நிறுத்தி முற்றுகையை உடைக்க நேசநாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் வெற்றி பெறவில்லை. பின்னால் ஹிட்லரின் பீல்ட்மார்ஷல் ரோமல் பின்வருமாறு கூறினார்: "1940 ஆம் ஆண்டு பிரான்சில் எங்களுடைய 10 கவச டாங்கி டிவிசன்கள் தாக்குதலை முடித்தன. பிரிட்டிஷ்-பிரெஞ்சு படைத்தலைமையின் செயலின்மை இந்த வெற்றியை இலகுவாக்கியது." ஜேர்மனியத் துருப்புக்களின் மிகப் பெரும் இலாபம் நேச நாடுகளின் 49 டிவிஷன்களை கரையோரத்திற்கு நெருக்கியது.

(தொடரும்)

ஜேர்மனியின் கவசடாங்கி பிரான்சின் அசைன் ஆற்றைக் கடந்து செல்கிறது பிரெஞ்சு சரணடைய முன்பு-ஜுன் 21, 1940



## யுத்தத்தின் தொடக்கம். சோவியத் யூனியனுக்கு எதிரான பாசிச ஆக்கிரமிப்பிற்கான ஏற்பாடுகள்

பிரான்சின் மலைப்பகுதிகளில் விமானம் மூலம் தரையிறக்கப்பட்ட ஜேர்மன் துருப்புக்கள்



வி.அ.மத்சுலேன்கோ

நேசநாட்டுப்படைகள்களத்தில்-ஜேர்மனிக்கு எதிராக



# கிளிநொச்சி மாவட்டத்திற்கு 25 மில்லியன் ரூபா நன்கொடை



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு மீளக்குடியேறிய மக்களுக்கு ஜப்பான் அரசாங்கம் 25 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கவுள்ளது. வடமாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் சமூக, பொருளாதார மீள்கட்டமைப்பு திட்டத்தின் கீழ் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் கடற்றொழில் உற்பத்தியை சிறப்பாக மேற் கொள்வதற்கும் ஜப்பான் அரசாங்கம் இந்த நிதியை அன்பளிப்பாக வழங்கவுள்ளது.

மீள்குடியேறிய மக்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தவும் மீள்கட்டுமான திட்டமொன்றை முன்னெடுப்பது மற்றும் மக்களின் வாழும் சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்நிதி பாரிய உந்துசக்தியாக அமையும்.

இச் செயற்பாடுகள் சேவாலங்கா அமைப்பினூடாக முன்னெடுத்துச் செல்லப்படும் கண்டவாளை பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறிய 370 குடும்பங்கள் இத் திட்டத்தினால் பயனடையவுள்ளன.

மீள்குடியேற்றப்பட்ட மக்களின் சமூக, பொருளாதார இடைவெளிகளை பூர்த்தி செய்யவும் கீழ்க்கட்டுமான வசதிகளுக்கும் ஜப்பான் அரசாங்கத்தினால் வழங்கப்படும் இந்நிதி பாரிய உதவியாக அமையுமென்று சேவா லங்கா நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹர்ச் நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

கீழ்மட்ட மனிதப் பாதுகாப்பு நன்கொடைத் திட்டத்தின் கீழ் மேற்படி நிதி வழங்கப்படுகின்றது. இதன்மூலம் மக்களின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக்கூடியதாக இருக்கும்.

அத்துடன் தங்குதடையற்ற அபிவிருத்திக்கு இந்நிதி உந்து சக்தியாக அமையும் என்பதில் ஜப்பான் அரசாங்கம் முழு நம் பிக்கை கொண்டுள்ளது.

1989 ஆம் ஆண்டு முதல் இவ்வாறான 226 செயற்றிட்டங்களுக்காக 3ஆயிரத்து 400 மில்லியன் ரூபா வரை நன்கொடையாக ஜப்பான் அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## விவசாய இரசாயன பொருட்கள் ஏற்றுமதி

(கொழும்பு)

இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டதாகக் கூறப்பட்டு வியட்நாமிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்கள் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான தகவலை வியட்நாமின் விவசாயத்துறை அமைச்சு வெளியிட்டுள்ளது.

வியட்நாமில் உள்ள இலங்கைக்கான தூதுவராலயம் ஊடாக இது குறித்து அறிந்து கொள்ளப்பட்டதாக விவசாயத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் சாந்த எமதியகொட தெரிவித்துள்ளார்.

விவசாய இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் தனியார் நிறுவனமொன்று சட்ட விரோத முறையில் இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## செனட்சபை தீர்வு திட்ட யோசனையில் பலனில்லை

### தமிழ், முஸ்லிம் கட்சிகள் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் செனட் சபை தீர்வுத்திட்ட யோசனையில் பலனில்லை என தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள் தெரிவித்துள்ளன.

குறிப்பாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் இந்த நிலைப்பாட்டை வெளியிட்டுள்ளன.

செனட் சபை யோசனைத்திட்டம் 13 ஆம் திருத்தச் சட்டமூலத்திற்கு அப்பாலான தீர்வுத்திட்டமாக அமையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை வடக்கு,கிழக்கு பிரச்சினைக்கு செனட் சபை தீர்வாக அமையாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு செனட்சபை எந்தவ்கையிலும் தீர்வாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## அடிப்படை உரிமைமீறல் விசாரணை மே மாதத்தில்

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் ஒத்திவைத்தது.

மனுதாரரான பொன்சேகா மான் எதேச்சாதிகாரமான முறையில் கைது செய்யப் பட்டதாகவும் தடுத்து வைக்கப்பட்டதாகவும் இதன்மூலம் தனது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு விட்டதாகவும் முறைப்பாடு செய்து உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா , நீதியரசர்களான பி.ஏ. ரத்நாயக்கா மற்றும் சுரேஷ் சந்திரா முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட பின் மே 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (அ-2)

## பதிவு செய்யப்பட்ட இணையத்தளங்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தை கடந்துள்ளது

### எல்.கே.டொமேன் பதிவாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

எல்.கே.டொமேன் பெயரில் பதிவு செய்யப்பட்ட இணையத்தளங்களின் எண்ணிக்கை பத்தாயிரத்தைக் கடந்துள்ளது.நாளாந்தம் குறைந்தபட்சம் 20 இணையத்தளங்கள் புதிதாக பதிவு செய்யப்படுகின்றன எனவும் இதற்கான கேள்வி அதிகரித்துச் செல்கிறது எனவும் எல்.கே டொமேன் பதிவாளர் பேராசிரியர் கிஹாண் டயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் இருந்து இணையத்தளங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கிடைக்கின்றன என அவர் மேலும் கூறினார்.

இலங்கை அரசாங்கம் இணையத்தள இயக்குநர்களை தத்தமது இணையத்தளங்களை பதிவு செய்தே இயக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளதுடன் இணையத்தளங்களுக்கென சில விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் விதித்துள்ளது.

இதற்கமைய இணையத்தளங்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு அதனடிப்படையில் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## இந்திய மீனவர்கள் குற்றச்சாட்டுகளில் எதுவித உண்மையும் கிடையாது - கடற்படை மறுப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் கிடையாது என இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் தாக்கப்படுவதாக கண்மூடித்தனமாக தம்மீது குற்றம் சுமத்தப்பட்டு வருவதாக கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கான எந்த விதமான சான்றுகளும் கிடையாது எனத் தெரிவித்துள்ளனர்.

அநேக சந்தர்ப்பங்களில் ஆபத்தில் சிக்கிய இந்திய மீனவர்களை மீட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மனிதாபிமான முறையில் நடத்தப்படுவதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (அ-2)

## ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவருக்கு விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல்

### சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

ஜெனீவாவிற்கான இலங்கைத் தூதுவர் தமரா குணநாயகத்திற்கு தமிழீழ விடுதலை புலிகள் அச்சுறுத்தல் விடுத்து வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை குழுக்கூட்டத்தில் இலங்கைக்கு எதிராக விடுதலைப்புலிகள் ஆதாரவாளர்கள் பல்வேறு சூழ்ச்சிகளை மேற்கொள்ள திட்டமிட்டுள்ளனர் என சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்த தமரா குணநாயகம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துவருவதாகவும் இதன் காரணமாகவே விடுதலைப் புலி ஆதாரவாளர்கள் தூதுவருக்கு கொலை மிரட்டல் விடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற தமரா குணநாயகம் விடுதலைப் புலி செயற்பாட்டாளர்களின் நடவடிக்கைகளை ஒடுக்க பல வழிகளில்முயன்று வருவதாக பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தூதுவரின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு அருகாமையில் விடுதலைப்புலிச் சந்தேக நபர்கள் சந்தேகத்திற்கு இடமான வகையில் சுற்றித் திரிந்ததாக சிங்கள செய்தித்தாள் ஒன்று குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## ஜானக பெரேரா கொலைவழக்கு விசாரணை அறிவித்தல் 23இல்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கொலை வழக்கு தொடர்பான வழக்கு விசாரணை மீண்டும் ஆரம்பமாகும் தினம் குறித்து எதிர்வரும் 23ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக வடமத்திய மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி சுனந்தகுமார, அநுராதபுர மேல்நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது அறிவித்துள்ளார்.

ஜானகபெரேரா உள்ளிட்ட 29 பேர் உயிரிழக்கக் காரணமான குண்டுத்தாக்குதல் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இரண்டு பிரதான சந்தேகநபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த பிரதிவாதிகளுக்கு எதிராக சட்டமா அதிபரினால் வெவ்வேறாக 48 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு சட்டத்தரணியும் ஆஜராகாத காரணத்தினால் அவர்களால் குற்றப்பத்திரிகைகளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

சட்டஉதவி ஆணைக்குழு அல்லது வேறு முறையினால் பிரதிவாதிகள் சார்பில் சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மேல்நீதிமன்ற நீதிபதி அரச சட்டத்தரணிக்கு உத்தரவிட்டுள்ளார். (அ-2)

# முதலாவது இராணுவ நீதிமன்றுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

முதலாவது இராணுவ நீதிமன்றத்திற்கு எதிராக முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகாவினால் தாக்கல் செய்யப்பட்ட ஆணை கோரும் மனு மீதான விசாரணையை நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றம் எதிர்வரும் மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

நீதியரசர்கள் ரோஹிணி மாரசிங்க மற்றும் உபாலி அபேரத்ன முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா படைத்துறை உத்தரவுகளை அலட்சியப்படுத்தினார் எனவும் அரசுக்கு விசுவாசமற்ற வார்த்தைப் பிரயோகங்களைச் செய்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் பேரில் முதலாவது இராணுவ நீதிமன்றம் அவரைக் குற்றவாளியாகக் கண்டு அவரது படைத்துறை பதவி மற்றும் அந்தஸ்துகளை நீக்குவதற்கான தீர்பை வழங்கியது.

இந்தத்தீர்ப்புக்குஎதிராகவேபொன்சேகா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுவைத்தாக்கல் செய்திருந்தார்.

இராணுவத் தளபதி பெல் ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மேஜர் ஜெனரல் எச். எல்.வீரதுங்க, மேஜர் ஜெனரல் ஏ.எல்.ஆர்.விஜேதுங்க, மேஜர்ஜெனரல் டி.ஆர்.ஏ.பி.ஜயதிலக்க, பிரதி சொலிசிற்றர் ஜெனரல் டபிள்யூ. ஜே.எஸ். பெர்னாண்டோ, சட்டமா அதிபர் ஆகியோர் இவ்வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ-2)

# கணக்கறிக்கை சமர்ப்பிக்க தவறியுள்ள அரசியல் கட்சிகளின் பதிவுகள் இரத்து?

## தேர்தல் திணைக்களம் முடிபு

கணக்கறிக்கை மற்றும் கொள்கை அறிக்கைகளை பல வருடங்கள் சமர்ப்பிக்கத் தவறிய 30 அரசியல் கட்சிகளின் பதிவுகளை இரத்துச் செய்வதற்கு தேர்தல்கள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தேர்தல் திணைக்களத்தைச் சேர்ந்த தம்மை இனங்காட்ட விரும்பாத அதிகாரியொருவர் தெரிவிக்கையில்,

நாட்டில் 67 அரசியல் கட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும்ஆனால், அவற்றில் 30 கட்சிகள் கடந்த பல வருடங்களாக செயற்பட்டு வருகின்ற போதும் அவை அரசியலில் ஈடுபடவில்லை எனவும் கூறினார். இக்கட்சிகளின் பதிவுகள் உடனடியாக இரத்துச் செய்யப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட புதிய சட்டத்தின் படி அரசியல் கட்சிகள் தமது வருடாந்த கணக்கறிக்கையை தேர்தல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இது ஒரு வருடாந்த தேவைப்பாடாகும். அத்துடன் கட்சியின் யாப்பு மற்றுழ் நிர்வாகிகளின் விபரங்கள், அரசியல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றின் பிரதிகளையும் அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வறிக்கைகளை வழங்குவதற்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எனினும் இக்கட்சிகள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டங்களின் படி செயற்படத்தவறிவிட்டனஎனஅவர்கூறினார்.

பதிவு இரத்துச் செய்யப்படவுள்ள கட்சிகளின் விபரங்களை வெளியிட அவர் மறுத்து விட்டார். எனினும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சியான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் அவற்றில் ஒன்று என அவர் தெரிவித்தார். (அ-2)

# வெற்றுக்காணியிலிருந்து வெடிபொருட்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

கல்முனை பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள சாய்ந்தமருது ஒஸ்மன் வீதியில் உள்ள வெற்றுக்காணி ஒன்றிலிருந்து வெடி பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று காலை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே இவ் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியில் பொலித்தீன்பை ஒன்றினால் பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக புதைத்து வைக்கப்பட்டிருந்தது.

இத் தேடுதலின் போது 84 எல் ரக துப்பாக்கி வகைகள் 70, ரி.56 ரக துப்பாக்கி ரவைகள் 220, எஸ்.பி.வெடிமருந்து ஒன்று என்பன மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# பாதுக்கவில் 4மாத குழந்தை கொலை

(பாதுக்க)

பாதுக்க மாவத்தகம பகுதியில் நான்கு மாத குழந்தை ஒன்று கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் குறித்த குழந்தையின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அவிசாவளை பதில் நீதவான் நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். பொலிஸார் குறிப்பிட்ட சம்பவத்தினால் அதிர்ச்சிக்குள்ளான குழந்தையின் தாயார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய குழந்தையின் சடலம் தொடர்பான பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு அவிசாவளை சட்டவைத்திய அதிகாரிக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ-2)

# 2012.01 25 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1327-14 வயது மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★ 1494-இரண்டாம் அல்பொன்சோ நேப்பில்ஸ் மன்னனாக முடிசூடினான்.

★ 1498-போர்த்துக்கீச நாடுகாண் பயணி வாஸ்கொடகாமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.

★ 1755-மொஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1881-தோமஸ் அல்வா எடிசன், அலெக்சாண்டர் கிரஹாம் பெல் ஆகியோர் இணைந்து ஓரியண்டல் டெலிபோன் கம்பனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

★ 1882-வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

★ 1890-நெல்லிபிளை தனது 72 நாட்கள் உலகம் சுற்றும் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டார்.

★ 1917-டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு டொலர் 25 மில்லியன்களுக்கு விற்கப்பட்டது.

★ 1918-உக்ரேய்ன் மக்கள் போல்ஷெவிக்ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தனர்.

★ 1919-நாடுகளின் அணி நிறுவப்பட்டது.

★ 1924-முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பிரான்சில் ஷாமனீ என்ற இடத்தில் ஆரம்பமானது.

★ 1942-இரண்டாம் உலகப் போர்: தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கா மீதும் ஐக்கிய இராச்சியம் மீதும் போரை அறிவித்தது.

★ 1949-சீனக் கம்யூனிஸ்டுக்களின் படைகள் பீக்கிங்கினுள் நுழைந்தன.

★ 1949-இஸ்ரேலில் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் (David Ben- Gurion) பிரதமரானார்.

★ 1955-சோவியத் ஒன்றியம் ஜேர்மனி மீது அதிகாரபூர்வமாக போரை நிறுத்தியது.

★ 1971- உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஒபோட் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டு இடி அமீன் தலைவரானார்.

★ 1971- இந்தியாவின் 18 ஆவது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

★ 1981- மா சே துங்கின் மனைவி ஜியாங் கிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

★ 1986- தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகாண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.

★ 1994- நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.

★ 1995- யோசப் வாஸ் அடிகளார் பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப் பரால் முத்திப்பேறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

★ 1999- மேற்கு கொலம்பியாவில் இடம்பெற்ற 6.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் ஆயிரம் பேர் வரையில் உயிரிழந்தனர்.

★ 2002-விக்கிப்பீடியா மீடியாவிக்கி மென்பொருளுக்கு மாறியது.

★ 2004-ஒப்போர்ச்சுனிட்டி தளவுளவி (MER-B) செவ்வாயில் தரையிறங்கியது.

★ 2005-இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மந்திராதேவி என்ற இடத்தில் கோயில் ஒன்றில் சனநெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 258 பேர் உயிரிழந்தனர்.

★ 2006- சூரிய குடும்பத்திற்கு வெளியே பால் வழியின் நடுவிற்குக் கிட் டவாக பூமியில் இருந்து 21,500 ±3300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG- 390 LB என்ற கோள் கண் பிடிக்கப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1627-ரொபேர்ட் பொயில், ஐரிஷ் வேதியியலாளர் (இ.1691)

★ 1872-பி.ஆர். ராஜமய்யர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர் (இ.1898)

★ 1917-ஈலியா பிரிகோஜின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய அறிவியலாளர் (இ.2003)

★ 1928-எடுவார்ட் ஷெவார்டுநாட்சே, ஜோர்ஜியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர்

★ 1933-கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் குடியரசுத் தலைவர் (இ.2009)

★ 1941-செங்கை ஆழியான், ஈழத்து எழுத்தாளர்

★ 1949-போல் நர்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

### இறப்புக்கள்

★ 1922-சுன்னாகம் குமரசாமிப் புலவர் (பி.1855)

★ 2005-பிலிப் ஜான்சன், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (பி.1906)

★ 2006-நெல்லை கிருஷ்ணமூர்த்தி, கர்நாடக இசைக் கலைஞர்

### சிறப்பு நாள்

★ ரஷ்ய மாணவர் தினம் (தத்தியானா தினம்)

# கூட்டமைப்பு மீதான கோபம் நியாயமானதா?

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரித்து அதிலிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டி, பதிலளிக்கும் வகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளது.

கடந்த வாரம்வெளியிடப்பட்ட இந்த அறிக்கை அரசாங்கத்திற்கு



கடும் சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகவே கருதப்படுகிறது.

இதையிட்டு அரசாங்கம் வெளிப்படையாக எதையும் கூறாது போனாலும், சஜின்வாஷ் குணவர்தன போன்ற அரசாங்கத்தின் அரசியற் கொள்கைகளை தீர்மானிக்கும் வல்லமைபெற்ற சிலர் இதுபற்றிக் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இதிலிருந்து இந்த அறிக்கையை அரசாங்கம் விரும்பவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஏற்கனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டதும் அதனை நிராகரித்து கூட்டமைப்பு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. அதனை அரசாங்கம் கண்டிக்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டது.

ஆனால், இம்முறை அப்படிக் கண்டிக்காது போனாலும் அந்தக் கோபத்தை வேறு விதத்தில் வெளிப்படுத்தியுள்ளது.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் விதத்தில் இந்த அறிக்கை அமையவில்லை என்பதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பிரதானமான குற்றச்சாட்டு. இதையே தான் அமெரிக்கா, பிரித்தானியா, கனடா போன்ற பல நாடுகளும் கூறியுள்ளன. அதையேதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வலியுறுத்தியுள்ளது. இந்திய வெளிவிவகார அமைச்சின் வருகைக்கு இரண்டொரு நாட்கள் முன்னதாக இதை வெளியிட்டதுதான் அரசுக்கு கடும்

**கே.சஞ்சயன்**

கோபத்தை ஏற்படுத்தியது.

நல்லணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்த இந்தியா, குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுவதற்கு கால வரம்பு ஒன்றை நிர்ணயிக்குமாறு கூறியிருந்தது.

இந்தக்கட்டத்தில் இந்தியாவின் அழுத்தங்களை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காய்களை நகர்த்துவதாக அரசுக்கு ஒரு சந்தேகம் எழுந்தது.

அதைவிட ஜெனிவாவில் அடுத்த இரண்டு மாதங்களில் தொடங்கப் போகும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரையும் அரசாங்கம் கவலையோடுதான் நோக்கத்தொடங்கியுள்ளது.

இந்தக்கூட்டத்தொடரை இலக்கு வைத்து அரசாங்கம்மீது தாக்குதல் தொடுக்க கூட்டமைப்புத் தயாராகி வருவதாக சஜின்வாஷ் குணவர்தன கூறியிருந்த கருத்து இதனை உறுதி செய்கிறது

சஜின் வாஷ் குணவர்தன ஒன்றும் சாதாரணமான நபரில்லை. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் எல்லா வெளிநாட்டுப் பயணங்களின் போதும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை உள்ளிட்ட முக்கியமான சர்வதேச கூட்டங்களிலும் பங்கேற்ற ஒருவர். அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களிலும் அவர் பங்கேற்கின்றார்.

ஆக, உள்ளகரீதியான அரசியல் நகர்வகளிலும் வெளியக இராஜதந்திர நகர்வகளிலும் பரிச்சயமுள்ள அவர், த.தே.கூட்டமைப்பு மேற்கொள்ளும் நகர்வுகளை எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறார் என்பது தெளிவாகியுள்ளது.

இவர்தான் த.தே.கூட்டமைப்பின் அறிக்கையை அரசாங்கம் விரும்பவில்லை என்பதை வெளிப்படுத்தியுள்ளார். இந்தக்கட்டத்தில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையின் குறைபாடுகளை கூட்டமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது தவறான காரியமா என்ற கேள்வி எழுகிறது.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய சுதந்திர முன்னணி, ஈபிடிபி போன்ற கட்சிகள் கூட இந்த அறிக்கையின் பல விடயங்கள் குறித்து தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை தாம் முற்றுமுழுதாக ஏற்றுக்கொண்டதாக அரசாங்கமும் அறிவிக்கவில்லை, அதிலுள்ள கட்சிகளும் அப்படி ஏற்றுக்கொள்ளவில்லை.


வரிக்குவரி ஏற்றுக்கொண்டு முழுயாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அறிக்கை ஒன்றும் பைபிள் அல்ல என்று ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவே கூறியுள்ளார்.

ஆக, அரசாங்கம் இந்த அறிக்கையை முழுமையாக ஏற்கவும் இல்லை, முழுமையாக நடைமுறைப் படுத்தப்போவதுமில்லை. என்று எண்ணத் தோன்றுகிறது.

அரசாங்கமோ அதிலுள்ள கட்சிகளோகூட இந்த அறிக்கையை முழுமையானதாக -எதிர்ப்புகளின்றி ஏற்றுக்கொள்ளாதபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் அதனை நிராகரிக்கக் கூடாது என்று கருதுவது எந்த வகையிலும் நியாயமற்றது.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளும் இதே கருத்தை கூறின. இந்நிலையில் அரசாங்கம் கூட்டமைப்பு விடயத்தில் மட்டும் எதற்காக கோபப்படுகிறது?

இந்தச் சீற்றத்தையும் அடிப்படையாக வைத்துத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடத்திவந்த பேச்சுக்களை அரசாங்கம் இடைநிறுத்தியுள்ளதா?



கடந்த 17, 18, 19 ஆம் திகதிகளில் பேச்சுக்களை நடத்துவதற்கு திகதி குறித்ததும் அரசாங்கம்தான். ஆனால் எந்தக்காரணமும் கூறாமல் பேச்சில் பங்கேற்காமல் ஒதுங்கியதும் அரசாங்கம் தான்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வரும்வரை அவர்களுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தப் போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சை மேற்கோள் காட்டி ஒரு ஊடகம் செய்தி வெளியிட்டது. இதேபோன்றுதான் சஜின்வாஸ் குணவர்தனவும் கூறியுள்ளார்.

ஆக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்குள் கூட்டமைப்பு வரும் வரை அதனுடன் பேச்சுக்களை நடத்தப்போவதில்லை என்ற ஒரு முடிவை அரசாங்கம் எடுத்துள்ளது.

ஆனால், கடந்த 17 ஆம் திகதி, அதாவது பேச்சுக்கள் தொடங்குவதாக இருந்த அன்று மதியத்துக்கு மேல் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் இணைந்து பங்கேற்ற செய்தியாளர் சந்திப்பில் அதுபற்றி வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் எதுவுமே கூறவில்லை. கூட்டமைப்புடன் பேச்சுக்கள் தொடரும் என்றுதான் அவர் கூறியிருந்தார்.

ஆனாலும், அரசாங்கம் கூட்டமைப்புடனான பேச்சுக்களை சந்தடியின்றி நிறுத்திவிட்டது. இது பற்றி பெரும்பாலான ஊடகங்கள் அவ்வளவாக கண்டுகொள்ளாதது ஆச்சரியமான விடயம்தான். முன்னர் கூட்டமைப்பு இப்படிப் பேச்சுக்களில் இருந்து விலகிய போது அதைப் பெரிதாக எடுத்துக் கொண்ட ஊடகங்கள் இதைக் கண்டு கொள்ளவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களுக்கு அரசாங்கம் நிர்ணயித்த நாட்களில் அதை நடத்தாமல்போன பல சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆனால், ஒரு அறிவிப்பும் இல்லாமல் பேச்சுக்களில் பங்கேற்காமல் ஒதுங்கியது இதுதான் முதல்முறை. இது கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கைக்கான பதிலடியாகவே கொள்ளப்படுகிறது.

இதிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அறிக்கை எந்தளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைப்புரிந்து கொள்ள முடிகிறது. நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகள் குறித்து அரசாங்கம் என்ன அணுகுமுறையை கடைப்பிடிக்கப் போகிறது என்றே அறிவிக்கவில்லை.

அதற்கிடையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த அறிக்கையை முழுமையாகஏற்க வேண்டும் என்று அரசாங்கம்நினைப்பது நியாயமற்றது.

அதைவிட தெரிவுக்குழுவில் பங்கேற்பதற்கு த.தே.கூட்டமைப்பு மட்டும் மறுக்கவில்லை. எதிர்க் கட்சிகள் எதுவுமே அதற்குப் பிரதிநிதிகளை நியமிக்கவில்லை.

ஆனாலும், ஐ.தே.காவையோ அல்லது ஜனநாயக தேசிய முன்னணியையோ அரசாங்கம் கண்டு கொள்ளவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மட்டும்தான் அது பொறிக்குள் சிக்கவைக்க முனைகிறது. தெரிவக்குழுவக்குள் வந்தால் தான் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்கிறது அரசாங்கம்.

அதேவேளை பேச்சுக்களில் எட்டப்படும் இணக்கப் பாட்டுடன்தான் தெரிவக்குழுவுக்குள் வரமுடியும் என்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்நிலையில் ஒன்றை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது. தெரிவுக் குழுவும்சரி, அரசியற் பேச்சுக் களும்சரி முன்னோக்கி நகரப் போவதில்லை. என்பதே அது.

# இஸ்லாமிய அமைப்புக்களை சேர்ந்தோருக்கு அல்-குவைதா அமைப்புடன் தொடர்பு?

## திவயின தகவல்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்ட அடிப்படைவாத இஸ்லாமிய அமைப்புகளை சேர்ந்த 161 வெளிநாட்டவர்கள் அல்-குவைதா அமைப்பினால் வழி நடத்தப்படுவார்கள் என சர்வதேச பொலிஸ் மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் என்பன தகவல்கள் வெளியிட்டுள்ளன.

இந்த இஸ்லாமிய அமைப்பினரின் வெளிநாட்டு பயணங்களுக்கான நிதியுதவிகளை அல்-குவைதா அமைப்பு வழங்கி அவர்களுக்கான விசா அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளதாக தெரியவந்துள்ளது என திவயின கூறியுள்ளது.

அத்துடன் கடந்த 2006 ஆம் ஆண்டு மும்பையில் 166 பேர் உயிரிழக்க காரணமான தாக்குதலுடன் இந்த ஜமாத் இயங்கத்தினருக்கும் தொடர்புள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இருந்து வெளியேற்றப்பட்ட இஸ்லாமிய அமைப்பினர் கிழக்கில் பிரசாரங்களை செய்து வந்துள்ளனர்.

அதேவேளை, இந்த அமைப்பினருடன் சில மாலைதீவு பிரஜைகளும் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருவதாகவும் மாலைதீவு இஸ்லாமிய நிதியத்தின் தலைவர் இப்ராஹிம் பௌசி தெரிவித்துள்ளார்.

இதனிடையே இஸ்லாமிய அடிப்படைவாதிகளை இலங்கைக்கு யார் வரவழைத்தது என்பது குறித்து புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் திவயின கூறியுள்ளது. (அ-2)

# சுற்றுலா பயணிகளை கண்காணிக்க விசேட பிரிவு

இலங்கைக்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளைக் கண்காணிப்பதற்கு விசேட பிரிவு ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் நடவடிக்கைகள் குறித்து இந்தப் பிரிவு கண்காணிப்பு நடத்தும் என இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் சில சுற்றுலாப் பயணிகள் வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எனினும் இந்தக் கண்காணிப்பு குழு உண்மையான சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறை ஏற்படுத்தும் வகையில் அமையாது என குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டிற்கோ கலாசார விழுமியங்களுக்கோ அல்லது தேசிய பாதுகாப்பிற்கோ குந்தகம் ஏற்படுத்தும் வகையில் சுற்றுலாப் பயணிகள் நடந்து கொள்ள அனுமதிக்க முடியாது என சுட்டிக்காட்டியுள்ளது. (அ-2)

# இலங்கை வரவுள்ள ஓமான் அமைச்சர்



ஓமானின் கனிய எண்ணெய் துறை அமைச்சர் மொஹமட் பின் ஹமாட் உள்ளிட்ட தூதுக்குழுவினர் நாளை புதன்கிழமை இலங்கை வரவுள்ளனர்.

இந்த தகவலை கனிய எண்ணெய் கூட்டுதாபன அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படக்கூடிய முதலீடுகள் தொடர்பாக ஆராயும் நோக்கிலே இந்தக்குழு இலங்கை வரவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவினால் ஈரான் மீது பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஈரானில் இருந்து இலங்கைக்கு எண்ணெய் இறக்குமதி செய்ய முடியாதிருந்ததாக முன்னதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் அதற்கு மாற்று வழிகள் கையாளப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஓமான் மற்றும் சவுதி அரேபியாவில் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் இலங்கை வருகை தரவுள்ள ஓமானிய அமைச்சருடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ-2)

# இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதில் அரசின் செயற்பாடு திருப்தியாக இல்லை

## கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு ஸ்திரமற்றது என ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கம், சர்வதேச சமூகம் மற்றும் உள்நாடு ஆகிய தரப்பினருக்கு அரசாங்கம் மாறுபட்ட நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வழங்குவது தொடர்பில் அரசாங்கத்தின் முனைப்பு சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து இரண்டு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் ஆளும்ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சிக்குள் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவது தொடர்பில் இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் கருத்தை கேட்டறிவதற்கு முன்னர் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கூட்டணி கட்சிகளுக்கு இடையில் பொது இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

# சிறைக்கைதிகளிடையே மோதல்; ஐவர் காயம்

(காலி)

காலி சிறைச்சாலையில் கைதிகளுக்கும் சிறைச்சாலை பாதுகாவலர்களுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இரு கைதிகள் அடங்கலாக ஐவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

கைதிகள் சிலர் தப்பியோட முற்பட்ட போது சிறைச்சாலை அதிகாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு கைதியும் தாக்குதலில் ஒரு கைதியும் காயமடைந்துள்ளனர்.

கைதிகளின் தாக்குதலினால் மூன்று சிறைச்சாலை பாதுகாவலர்களும் காயமடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் சில கைதிகள் சிறைச்சாலை காவலர்களைத் தாக்கிவிட்டு தப்பிக்க முயற்சித்துளனர். இவ்வாறு தப்பிக்க முயற்சித்தவர்களை மடக்கிப் பிடிக்க சிறைச்சாலை பாதுகாவலர்கள் தீவிர முயற்சி எடுத்ததுடன் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் கைதியொருவர் காயமடைந்ததையடுத்து கைதிகளுக்கும் சிறைச்சாலை பாதுகாவலர்களுக்குமிடையில் மோதல் தீவிரமடைந்துள்ளது.

இந்த மோதல் சம்பவத்தின் போது மேலும் ஒரு கைதியும் மூன்று சிறைச்சாலை பாதுகாவலர்களும் காயமடைந்துள்ளனர். காயமடைந்துள்ள இரு கைதிகளும் சிறைச்சாலை பாதுகாவல்களும் காலி கராப்பிட்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன் காலி பொலிஸாரும் சிறைச்சாலை அதிகாரிகளும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(அ-2)

# டொலருக்கு விலை போனவர்களே நாட்டுக்கு எதிராக செயற்படுகின்றனர்

## கெஹலிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக ரீதியாக நடத்தப்பட்ட தேர்தல்களில் தோல்வியுற்று அரசியல் ரீதியாக ஒரு ஸ்தானத்துக்கு வர முடியாத குழுவினரும் டொலர்களுக்கு விலைபோனவர்களும் மக்கள் போராட்டம் என்ற பெயரில் எந்தவிதமான காரணங்களுமின்றி நாட்டுக்கு எதிராக சதிமுயற்சிகளை மேற்கொள்வதற்கு முயற்சிப்பதாக கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.


நாட்டுக்கும் அரசாங்கத்துக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் சதி முயற்சிகளுக்கு முகம்கொடுக்க அரசாங்கம் தயாராகவிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மறைத்திருந்து செயற்படும் இந்தக் குழுக்களை அடையாளம் கண்டு அவர்களின் நடவடிக்கைக்கு எதிர் நடவடிக்கை எடுக்க வேண்டிய சூழல் தோன்றியிருப்பதாக நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் கூறினார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,

மக்கள் போராட்டம் ஒன்றை நடத்துவதாயின் அதற்கு உரிய காரணம் இருக்க வேண்டும். நாட்டில் வறுமை, வேலையின்மை, பொருளாதாரப் பின்னடைவு என ஏதாவது காரணங்கள் இருக்க வேண்டும்.

ஆனால், இலங்கையில் தற்போது அவ்வாறான எந்தக் காரணங்களும் இல்லை. அரசாங்கம் நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னோக்கிக் கொண்டு செல்கிறது என்றார். (அ-2)



கலாபூஷணம் விருது பெற்ற பண்டிதை திருமதி வைகுந்தம் கணேசபிள்ளைக்கான கௌரவிப்பு விழாவும் அவர் எழுதிய நாட்டிய நாடகங்களின் தொகுப்பு நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் கோயில் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கணேசபிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் நூலினை யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் முகாமைத்துவ முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா வெளியிட முதல் பிரதியினை த.பராபரம், த.சொர்க்கலிங்கம் ஆகியோர் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

# 25 வீத சம்பளவுயர்வை மின்சாரசபை ஏற்றது

(கொழும்பு)

மின்சார சபை ஊழியர்களுக்கான 25 வீத சம்பள உயர்வை சகல மின்சார சபை தொழிற்சங்கங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இந்த நிலையில் மின்சார சபை ஊழியர்களின் ஜனவரி மாத சம்பளத்துடன் 25 வீத அதிகரிப்பு வழங்கப்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியது.

25 வீத சம்பள அதிகரிப்பு போதாது என மின்சார சபை தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் கொழும்பில் கூடி அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து ஆராய்ந்தன.

ஆனால், சில தொழிற்சங்கங்கள் மட்டுமே இதில் கலந்து கொண்டதோடு தீர்மானம் எதுவும் பெற முடியாமல் இந்தக் கூட்டம் இழுபறியில் முடிந்துள்ளது.

இந்த நிலையில் 25 வீத சம்பள அதிகரிப்பை ஏற்பதாக அறிவித்துள்ள மின்சார சபை தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்தில் குதிப்பதில்லை எனவும் அறிவித்துள்ளன. (அ-2)

## ஈரான்- இஸ்ரேல் இடையே மோதல்; அமெரிக்காவுக்கு இஸ்ரேல் அழைப்பு

ஈரானின் அணு ஆயுத தயாரிப்பு நிலையங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி அழிக்கப் போவதாக இஸ்ரேல் மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.ஈரான் தொடர்ந்து அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாக அமெரிக்கா உட்பட பல்வேறு மேற்கத்தைய நாடுகள் குற்றம் சாட்டி வருகின்றன.

இதனைத்தொடர்ந்து ஈரான் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளும் விதிக்கப்பட்டன. ஆனால் ஆக்கபூர்வ பயன்பாட்டுக்காக மட்டுமே அணுசக்தி உற்பத்தி செய்யப்படுவதாக ஈரான் தொடர்ந்து கூறிவருகின்றது. இந்நிலையில் சமீபகாலமாக அயல் நாடுகளான இஸ்ரேல்- ஈரான் இடையே மோதல் வெடித்துள்ளது. அணு உற்பத்தியை உடனடியாக நிறுத்த தவறினால் ஈரான் மீது தாக்குதல் நடத்த வேண்டும் என்று அமெரிக்காவை இஸ்ரேல் வலியுறுத்தியது.

இதற்கிடையே ஈரானின் அணு உற்பத்தி நிலையங்கள் மீது தாக்குதலை தொடங்க அமெரிக்காவுக்கு 12 மணி நேர கெடுவை இஸ்ரேல் விடுத்துள்ளது. அது தவறும் பட்சத்தில் தன்னிச்சையாக தாக்குதல் நடத்தப் போவதாகவும் எச்சரித்துள்ளது. இதனால் அமெரிக்கா அதிர்ச்சி அடைந்துள்ளது.(அ-2)

## பாகிஸ்தான் வீரர்கள் 15 பேரை தலிபான்கள் சுடும் வீடியோகாட்சி!

(பெஷாவர்)

பாகிஸ்தானைச் சேர்ந்த 15 இராணுவ வீரர்களை தலிபான்கள் சுட்டுக்கொல்லும் வீடியோ காட்சி பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.

பழிக்குப் பழியாக இந்தச் சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது. பாகிஸ்தானின் வடமேற்கு மற்றும் வஜிரிஸ்தான் பகுதியில் சோதனைச் சாவடியில் கடந்த மாதம் சில இராணுவவீரர்கள் காணாமல் போயினர். அவர்கள் கடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் கருதினர்.

இந்நிலையில்நேற்று முன்தினம் கொடூர வீடியோ காட்சி ஒன்று வெளியானது. அந்த வீடியோ ஒரு முன்னணி ஆங்கிலச்செய்தி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.அதில் பாகிஸ்தானின் எல்லைப் பகுதி இராணுவவீரர்கள் 15 பேர் பின்கைகள் கட்டப்பட்ட நிலையில் வரிசையாக அமரவைக்கப்பட்டனர்.

பின்னர் வரிசையாக நிற்க வைக்கப்பட்டு பின்னால் முகமூடி அணிந்த தலிபான்கள் ஒவ்வொருவரையும் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளும் கொடூரக் காட்சி நெஞ்சை உறைய வைப்பதாக இருந்தது.

பாக். ஆப்கானிஸ்தான் எல்லையில் மலைப்பகுதி உச்சியில் இந்தக்காட்சி எடுக்கப்பட்டிருந்தது. 2.38 நிமிடம் ஓடிய அந்தவீடியோக் காட்சியால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பாக். ஆப்கானிஸ்தான் எல்லையின் கைபர் மாவட்டத்தில் பதுங்கியுள்ள தக்ரிர் இ-தலிபான்கள் அமைப்பினர்தான் இந்தக் கொடூர செயலை அரங்கேற்றியுள்ளனர்.

சம்பவத்திற்குப் பின்னர் தலிபான்களில் ஒருவர் பேசுகையில், எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தாலோ, சுட்டுக்கொன்றாலோ இதேநிலைதான் ஏனைய பாக். வீரர்களுக்கும் ஏற்படும் என பேசும் காளட்சியும் இடம்பெற்றிருந்தது. (அ-2)



ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

## நைஜீரியா குண்டுவெடிப்புக்கு பான் கீ மூன் கடும் கண்டனம்



நைஜீரியாவில் நடந்த தொடர் வெடிகுண்டு தாக்குதலுக்கு ஐ.நா பொதுச்செயலர் பான் கீமூன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை,

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்கள் கடும் கண்டனத்திற்குரியது.


இதுபோன்ற தாக்குதல்களால் பல அப்பாவி மக்கள் பலியாகினர். மனித உயிர்களுக்கு எதிராக நடத்தப்படும் தாக்குதல்கள் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள முடியாது. நைஜீரியா மக்களுக்கும், குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கின்றேன்.

இதற்கு காரணமானவர்கள் கண்டிப்பாக சட்டத்தின் முன் நிறுத்தப்படுபவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

நைஜீரியாவில் வெள்ளிக்கிழமை பொலிஸ் நிலையங்களின் மீதும் கானோ நகரில் உள்ள உளவுத்துறை அலுவலகங்கள் மீதும் தீவிரவாதிகள் வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தினர்.

இதில் இந்தியர் ஒருவர் உட்பட 160 இதற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர். (அ-2)

## தானாக பதவிவிலகிய ஏமன் ஜனாதிபதி நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோரினார்



ஏமன் நாட்டின் ஜனாதிபதியாக அலி அப்துல்லா சலே கடந்த 33 ஆண்டுகளாக பதவி வகித்து வந்தார். அவரது ஆட்சிக்கு எதிராக அந்நாட்டு மக்கள் 11 மாதங்களாக போராட்டத்தில் ஈடுபட்டனர். அதை தொடர்ந்து நடந்த இராணுவதாக்குதலில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பலியானார்கள். எனவே போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகள் தீவிர முயற்சி கொண்டன.

அதையடுத்து அவர் பதவியில் இருந்து விலகினார். கடந்த ஜூன் 3 ஆம் திகதி அரண்மனைக்குள் உள்ள மசூதியில் பிரார்த்தனையில் ஈடுபட்டபோது நடந்த குண்டுவெடிப்பில் சலே படுகாயம் அடைந்தார்.

அதற்கான மேல் சிகிக்சை பெற நேற்று முன்தினம் அவர் அமெரிக்கா புறப்பட்டு சென்றார்.

அதற்கு முன்னதாக அவர் அரசு தொலைக்காட்சிக்கு இறுதி உரைநிகழ்த்தினார். அப்போது தனது 33 ஆண்டுகால ஆட்சியில் நடந்த தவறுகளுக்கு பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்டார்.

மேலும் போராட்டத்தின் போது உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினரிடம் வருத்தம் தெரிவித்தார்.

தற்போதைய துணை ஜனாதிபதி அப்ராப்பு மன்சூர் ஹாடி ஜனாதிபதி பொறுப்பு வகிக்கிறார்.

அதற்கான ஒப்புதலை பாராளுமன்றம் கடந்த சனிக்கிழமை வழங்கியது.

மேலும் புதிய ஜனாதிபதி ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படுவார்என்றும்அதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும் என்றும் சலே கூறினார்.

அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து திரும்பும் நான் ஜனாதிபதியாக இங்கு வரமாட்டேன். பொதுமக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவராக வருவேன் என்றும் உறுதி அளித்தார்.

பதவி விலகிய ஜனாதிபதிக்கு சலேவுக்கு வழக்கில் இருந்து அந்நாட்டு பாராளுமன்றம் விதிவில்க்கு அளித்துள்ளது. (அ-2)

## தலையெடுக்கிறது பறவைக்காய்ச்சல்; சீனாவில் இரண்டு பேர் உயிரிழப்பு

(பீஜிங்)


சீனாவில் பறவைக்காய்ச்சல் நோய்க்கு 2 பேர் பலியாகி உள்ளனர்.சீனாவில் கடந்த 18 மாதங்களாக அதாவது 1 1/2 ஆண்டுகளாக பறவைக்காய்ச்சல்நோய் பரவி வருகிறது. அதை தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இருந்தும் அதை கட்டுப்படுத்த முடியவில்லை.

பறவைக்காய்ச்சல் நோய் பாதித்த பேருந்து சாரதி ஒருவர் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி உயிரிழந்தார்.அவர் குவாங்டங் மாகாணத்தின் தெற்கு பகுதியை சேர்ந்தவர்.இந்த நிலையில் தற்போது மேலும் ஒருவர் பலியாகி-உள்ளார்.

சீனாவில் பறவைக்காய்ச்சலுக்கு இறந்தவர் எண்ணிக்கை 2 ஆக உயர்ந்தது. தற்போது கிழக்கு ஆசிய நாடுக ளான சீனா, வியட்நாம், இந்தோனேசியா மற்றும் கம்போடியாவில் பறவைக் காய்ச்சல் நோய் பரவி வருகிறது. அங்கு பலியானவர்கள் குறித்து அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. (அ-2)

### உலக தரிசனம்

## முஷாரப்பை கைது செய்ய பாராளுமன்றில் தீர்மானம்



(இஸ்லாமாபாத்)

நாடுதிரும்ப உள்ள பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை கைதுசெய்ய அந்நாட்டு பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன் எதிர்வரும் 27 அல்லது 30 ஆம் திகதிகளில் நாடுதிரும்பவுள்ளதாக தெரிவித்தார். இந்நிலையில் பாகிஸ்தான் பாராளுமன்ற மேல் சபையான செனட் சபையில் முஷாரப் நாடு திரும்பினால் அவரை கைது செய்ய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாகிஸ்தான் மக்கள் கட்சியைச்சேர்ந்த மூத்ததலைவரும் செனட்சபை உறுப்பினருமான ரஸா ரப்பானி நேற்றுமுன்தினம் இந்தத்தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

அதில் முஷாரப் மீது முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ, பலுசிஸ்தான் தேசிய கட்சி தலைவர் அக்பர் பக்டி ஆகியோர் கொலை செய்யப்பட்ட வழக்கு நிலுவையிலுள்ளது. எனவே தேசநலனுக்கான அரசியலமைப்பு சட்டம் விதி 6 இன் கீழ் அவர் கைது செய்யப்படவேண்டும்.ஆனால் தானாகநாட்டை விட்டு வெளியேறிவிட்டார். மீண்டும் நாடு திரும்பவுள்ளதால் அவரைக் கைது செய்யவேண்டுமெனக் கூறினார். இதைத் தொடர்ந்து அனைத்துக் கட்சிகளின் ஒப்புதலுடன் ஒருமனதாக தீர்மானம் நிறைவேறியது.

இதேவேளை பர்வேஷ் முஷாரப்பை நாடு திரும்ப வேண்டாம் என்று அந்த நாட்டின் உளவுத்துறை தலைவர் அகமது சுஜா பாஷா கேட்டுக் கொண்டதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.(அ-2)

## சிரியாவில் குண்டுவெடிப்பு; 14 கைதிகள் உயிரிழப்பு

(பெய்ரூட்)

சிரியாவில் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது. இதை முடிவுக்கு கொண்டுவர அரபுநாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன. இதற்காக அரபு நாடுகளின் குழுவினர் சிரியாவில் சுற்றுப் பயணம் செய்துவருகின்றனர்.

இந்நிலையில் சிரியாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள இட்லி-அரிஹாநகரங்களுக்கு இடையே வாகனத்தில் கைதிகளை ஏற்றிக்கொண்டு பாதுகாப்புப் படையினர் சென்று கொண்டிருந்தனர். அப்போது அந்த வாகனம் குண்டு வெடித்து தகர்க்கப்பட்டது. இதில் 14 கைதிகள் பலியானார்கள். மேலும் 6 பொலிஸார் உட்பட 26 பேர் படுகாயமடைந்தனர். (அ-2)

# கோப் அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்துமாறு அமைச்சர்களை அறிவுறுத்த தீர்மானம்-டியூ குணசேகர

(கொழும்பு)

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழு (கோப்) கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்தும்படி அமைச்சர்களை அறிவுறுத்துவதற்கு கோப் தீர்மானித்துள்ளது.

சில சிபாரிசுகளை அமுல்படுத்துவதில் தமக்குள்ள வரையறைகளை அமைச்சுக்களின் செயலாளர்கள் தெரிவித்துள்ளதாக கோப் தலைவரான சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர கூறியுள்ளார்.

இவ்விடயத்தில் அரசியல் தலைமைத்துவம் அறிவுறுத்தப்படுவது அவசியம் என அவர் கூறினார்.

நிதிமுறைகேடுகள் மற்றும் அரச நிறுவனங்களில் இடம்பெறும் முறைகேடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அமைச்சு செயலாளர்களை கோப் அறிக்கை கோரியிருந்தது.

வருடாந்த அறிக்கையை உரிய நேரத்தில் சமர்ப்பிக்காமை, கணக்காய்வு அறிக்கைகளை புறக்கணிப்பது என்பது அரச நிறுவனங்கள் மீது கோப் முன்வைத்த இரு பிரதான குற்றச்சாட்டுக்களாகும்.

இவ்விடயத்தில் அமைச்சு செயலாளர்கள் நடைமுறை சிக்கல்களை எதிர்நோக்குவதாக அமைச்சர் குணசேகர தெரிவித்தார்.

ஒரு சம்பவத்தில் முன்னாள் அமைச்சர் ஒருவர் வாகனமொன்றை பல வருடங்கள் திருப்பி ஒப்படைக்காமல் இருந்தார். அமைச்சின் செயலாளரால் இது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள முடியவில்லை.

பின்னர் நான் சி.ஐ.டியினரிடம் முறைப்பாடு செய்தேன். அதன் பின் வாகனம் மீள ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறான விடயங்களில் அரசியல் தலைமைத்துவம் பாத்திரம் வகிக்க முடியும் என அவர் கூறினார். (அ-2)

# தமிழர்களின் வளங்கள் அபகரிப்பு குறித்து ஜே.வி.பி. யின் மௌனம் வேடிக்கையானது

## ரில்வின் சில்வா தெரிவிப்பு



தமிழர்கள் தாயக வளங்கள் இந்தியாவினால் கொள்ளையிடப்படுவதாக குற்றஞ்சாட்டியுள்ள ஜே.வி.பி. கட்சி சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் தமிழர் தாயகத்தின் வளங்கள் பறிபோவது குறித்து மௌனமாக இருப்பது தான் வேடிக்கையாக உள்ளது.

தமிழர்களின் பிரச்சினைகளை பகடைக்காயாக பயன்படுத்தி தமிழர்களின் வளங்களைக் கொள்ளையடிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டுள்ளதாக ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கு பகுதிகளில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களால் தமிழர்களின் கடல்வளம் பறிபோவதோடு தமிழர்களின் காணிகளையும் ஆக்கிரமிக்கும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் மீதான இலங்கை அரச பயங்கரவாதத்துக்கு தோள் கொடுத்த ஜே.வி.பி.யானது இன்று தமிழர்களின் நலன்களை முன்னிறுத்தி தன்னுடைய அரசியல் இருப்பை தக்கவைக்க முயற்சிப்பதோடு சிங்கள ஆக்கிரமிப்பாளர்களால் தமிழர் தாயகத்தின் வளங்கள் பறிபோவது குறித்து மௌனமாக இருப்பது தான் வேடிக்கையாக உள்ளது என தமிழ் புத்திஜீவிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-2)

# போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்தி பிரித்தானிய தமிழர் பேரவை பரப்புரை



தபால்மா அதிபருக்கு எதிராகவும் தபால் திணைக்களத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தபால் ஊழியர் சங்க ஒன்றியம் ஏற்பாடு செய்த ஆர்ப்பாட்டமொன்றும் சத்தியாக்கிரகப் போராட்டமொன்றும் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது தபால்மா அதிபருக்கு எதிராக தேங்காய்கள் உடைக்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டபோரின்போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீனமான விசாரணை வேண்டுமென்ற முழுமையான விவாதம் ஒன்றை பிரித்தானிய நாடாளுமன்றத்தில் கொண்டு வருவதற்கான இணைய மனு ஒன்றினை பிரித்தானிய அரசாங்கத்தின் இணையத்தளத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு வலுச் சேர்க்கும் முகமாக அண்மையில் பிரித்தானிய தமிழர் பேரவையினால் நடத்தப்பட்ட துண்டுப் பிரசுர விநியோகமும் அனைத்து இன மக்களிடமும் இவ் இணையத்தள மனுவில் கையெழுத்துப் பெறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது. இதை பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்மேன், அலன்றொட்ஸ் ஆகியோர் நொட்டிங்கம் தொகுதியில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்ததுடன் ஜோன் மேன்னால் அப்பகுதியில் வாழுகின்ற மக்களுக்கு இதன் அவசியம் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது.

தமிழர்கள் மீதான தொடர்ச்சியான படுகொலைகள், மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் போன்றவற்றிக்கு எதிராக சர்வதேச சுயாதீன விசாரணை ஒன்றை மேற்கொண்டு தமிழ்மக்கள் மீது நடத்தப்பட்ட கொடுமைகளுக்கான நீதியினைப் பெறுவதற்கான விழிப்புணர்வு பரப்புரை போராட்டமொன்றை முள்ளிவாய்க்கால் நினைவுதினத்திலேயே பிரித்தானிய தமிழர் பேரவை ஆரம்பித்து வைத்தது.

இதை நாடாளுமன்ற உறுப்பினராகிய ஜோன்மேன் முதல் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரித்தானிய அரச இணையத்தள மனுவில் அனைவரும் கையை முத்திடுவதுடன் உறவினர்கள், நண்பர்கள், ஏனைய இனத்தவர்கள் அனைவரிடமும் இதன் அவசியத்தை தெளிவுபடுத்தி கையெழுத்திட வைக்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

அத்துடன் இவ் இணைய மனுவில் ஒரு இலட்சம் கையெழுத்துக்கள் பெறவேண்டி இருப்பதால் தொடர்ச்சியாக பிரித்தானிய தமிழ் பேரவையினால் நடத்தப்படுகின்ற செயற்பாடுகளில் அனைத்து மக்களும் பங்கெடுப்பதுடன் அதற்கான ஆதரவினையும் வழங்குமாறு பிரித்தானிய தமிழர் பேரவை கேட்டுள்ளது. (அ-2)

# அரச நியமனங்களை குறைக்குமாறு உலகவங்கி அழுத்தம் கொடுத்துவருகிறது

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அரசநியமனங்களை குறைக்குமாறு உலகவங்கி இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுத்துவருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வன்னித் தொண்டராசிரியர்களுக்கான கலந்துரையாடலொன்று யாழ்.வீரசிங்கம்மண்டபத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் உரையாற்றுகையில்,

சர்வதேச கடனடிப்படையில் தான் இலங்கைபோன்ற 3ஆம் உலக நாடுகள் இயங்கிவருகின்றன. அதனடிப்படையில் இலங்கைக்கு உலக வங்கி பெருந்தொகையான கடனுதவியை வழங்கி வருகின்றது.

இவ் உதவிகள் அதிகளவாக அரச நியமனங்களில் உள்ளவர்களுக்கே போய்ச்சேருகின்றது. நாடு தழுவிய ரீதியில் 25 ஆயிரம் ஆசிரியர்கள் மேலதிகமாக உள்வாங்கப்பட்டுள்ளனர். இந்நியமனங்களை குறைக்கக்கோரி உலகவங்கி தெரிவித்துள்ளது.

இங்கு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் எண்ணிக்கை மேலதிகமாகவே காணப்படுகின்றது.

எனினும் வன்னிமாணவர்களின் கல்வியைக் கருத்திற்கொண்டும் கடந்த காலங்களில் வழங்கப்பட்ட ஆசிரியர் நியமனங்கள், தொண்டராசிரியர்களுக்கு கிடைக்கவில்லையென்றாலும் 2006ஆம் ஆண்டு கிடைக்கவேண்டிய நியமனங்கள் துரதிர்ஷ்டவசமாக யுத்த சூழ்நிலையால் கிடைக்கமுடியாமல் போனது.

இதுபோன்ற காரணங்களால் இன்று வன்னித் தொண்டராசிரியர்களுக்கு நியமனங்களை வழங்கக் கோரி அவரிடம் பரிந்துரைத்துள்ளோம்.

பெருந்தொகையான ஆசிரியர்களை ஒரு சமகாலத்தில் உள்வாங்குவது கடினம்.எனினும் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் வெற்றிடங்கள் காணப்படுகின்றது. இவர்களை இலகுவில் இணைத்துக்கொள்ளமுடியும்.

தொண்டராசிரியர் நியமனத்திற்கு பெரும்பாலானவர்கள் பரிந்துரை செய்து படிப்படியாகவே முன்னெடுக்கப்படல் வேண்டும்.

முதலில் வடமாகாண கல்வியமைச்சின் அதிகாரிகள், கல்வியமைச்சர் பந்துலகுணவர்த்தன போன்றவர்களினூடாக பரிந்துரைக்கப்பட்ட பின்னர்தான் மந்திரிசபை பத்திரமாக தயாரிக்கப்படுகின்றது.

இவ்வாறான முயற்சிகள் பல சந்தர்ப்பங்களில் விமர்சிக்கப்பட்டும் இருக்கின்றன.

அபிவிருத்தித்திட்டம், மீள்குடியேற்றம், தொழில்முயற்சி என எல்லாவற்றுக்கும் விமர்சிக்கின்றனர்.

எல்லாம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. எதுவுமே முன்னெடுக்கப்படவில்லை என்று கூறுவது தவறு. தொண்டராசிரியர் நியமனங்களில் எத்தனைபேர் அரசியல் ஆதாயம் தேடியிருக்கின்றார்கள்.

தொண்டராசிரியர் தொடர்பான பிரச்சினை வடமாகாணத்திற்கு மட்டும் உரித்தானதொன்றல்ல. கிழக்கு மாகாணத்திலும் இப்பிரச்சினை தீயாகக் கொழுந்து விட்டு எரிகின்றது.

இங்கு நடைபெறும் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# டெங்குக் காய்ச்சலால் வைத்தியர் உயிரிழப்பு

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வைத்தியர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறை, நாகொடை, வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த வைத்தியர் கடந்த சில நாட்களாக அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை டெங்கு ஒழிப்பு செயலணி ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித மஹிபால குறிப்பிட்டார்.

இதன்போது நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளதாக மேலதிக செயலாளர் சுட்டிக்காட்டுகின்றார். (அ-2)

# சர்வதேச ஆதரவை திரட்ட முக்கிய அமைச்சர்கள் தலைமையிலான குழுக்கள் அவசர பயணம்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் பற்றி தாம் அச்சமடையவில்லை என இலங்கையின் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறியிருக்கும் அதே வேளையில், மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் மூத்த அமைச்சர்களின் தலைமையிலான குழுக்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ களமிறக்கியுள்ளார்.

இந்தத்திட்டத்தின் ஒரு பகுதியாக பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தலைமையிலான குழு ஒன்று சிலி, உருகுவே மற்றும் இரண்டு தென் அமெரிக்க நாடுகளுக்கும் பயணமாகவுள்ளது. இதேவேளையில் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையிலான குழு ஒன்று மனித உரிமை பேரவையிலுள்ள மேலும் சில நாடுகளுக்குப் புறப்படவுள்ளது.

தற்போது புதுடில்லியில் உள்ள வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அங்கிருந்து ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தை எதிர்வரும் 29 ஆம் திகதி ஆரம்பிப்பார். இதன்போது இரண்டு ஆபிரிக்க நாடுகளுக்கு அமைச்சர் பீரிஸ் செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரு வாரங்களுக்கு முன்னரே ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தை அவர் மேற்கொண்டிருந்த போதிலும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவின் கொழும்பு விஜயம் காரணமாக அவசரமாக நாடு திரும்பியிருந்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் டிலான் பெரேராவும் மற்றொரு தூதுக்குழுவுக்குத் தலைமை தாங்கி வெளிநாட்டுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார். இருந்தபோதிலும் அவர் பயணம் செய்யும் நாடுகளின் விபரங்கள் உடனடியாகத் தீர்மானிக்கப்படவில்லை.

இதேவேளையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன்னதாக மூன்று நாடுகளுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார். அடுத்த மாத முற்பகுதியில் பாகிஸ்தான், சிங்கப்பூர் மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளுக்கு அவர் பயணம் செய்யவிருக்கின்றார்.

அரசாங்கத்தின் உயர் மட்டக்குழுவினர் தாம் மேற்கொள்ளும் இந்த விஜயங்களின் போது ஐ.நா.மனித உரிமைகள் வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்பதும் நல்லிணக்க முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதையுமே இந்த விஜயங்களின் போது இலங்கையின் உயர் மட்டக்குழுவின் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு விளக்கும் எனத் தெரிகின்றது.

பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சி ஒளி பரப்பிய இலங்கையின் கொலைக்களங்கள் என்ற ஆவணப்படத்துக்கு எதிரான பிரச்சாரங்களை முன்வைப்பதும் இந்த அமைச்சர்கள் தலைமையிலான குழுக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள முக்கிய பணிகளில் ஒன்றாகும்.

மார்ச் மாதம் ஜெனீவாவில் இடம்பெறவிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படலாம் என்ற எதிர்பார்ப்புக்கள் அதிகரித்திருக்கும் ஒரு பின்னணியிலேயே உலக நாடுகளின் ஆதரவை தக்க வைத்துக் கொள்வதாக இந்தத் திட்டத்தை இலங்கை அரசாங்கம் வகுத்துக் கொண்டுள்ளது. (அ-2)

## பிரதேச செயலக ரீதியாக ஓய்வூதியக் கிளைகள்

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஓய்வூதியர்களுக்கு பிரதேச ரீதியாக ஓய்வூதியக் கிளைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என அரச ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தலைமைச் சங்கத்தால் மாவட்டச் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள் ளது.

இதற்கமைவாக தலைமைச் செயலகத்தின் பணிப்பின்படி பூநகரி, பளை, கரைச்சி, கண்டாவளை பிரசே செயலர் பிரிவுகளில் இக்கிளைத் தெரிவுகள் இடம்பெறவுள்ளன என மாவட்டச் செயலாளர் சி.பெருமாள் தெரிவித்துள்ளார். (அ-7-84)

## தெரிவுக்குழுவில் இடம்பெறமாட்டேன் என கூட்டமைப்பு அடம்பிடிக்க முடியாது

### அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் தீர்வு உட்பட எந்தவொரு சட்ட திட்டத்தையும் நிறைவேற்றும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடையாது. அதேபோன்று பாராளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கூறுவதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு உரிமை கிடையாது என்று அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கூட்டமைப்பின் பிரிவினைவாத கொள்கைகளுக்கு அஞ்சி ஹெல உறுமய ஒரு போதும் பின்வாங்கப் போவதில்லை.

தெரிவுக்குழுவை அதிகாரப் பகிர்விற்கு எதிராகவும் பொதுவான பிரச்சினைகளுக்கு சாதகமாகவுமே பயன்படுத்துவோம். இதை தவிர ஹெல உறுமயவிற்கும் அரசிற்குமிடையில் எவ்விதமான முரண்பாடுகள் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தொடர்ந்தும் கூறுகையில், அரசியல் தீர்விற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாகவே நடவடிக்கை எடுப்பதாக மஹிந்த சிந்தனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகள் பாராளுமன்றத்தின் ஊடாகவே தீர்க்கப்படல் வேண்டும். இதற்கு வெளியில் தன்னிச்சையாக செயற்பட்டு தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்திக் கொள்ளும் அதிகாரம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு கூட கிடையாது.

அரசியல் தீர்வுத் திட்டத்தை மையப்படுத்தி பாராளுமன்ற தெரிவுக்குழுவை அரசாங்கம் அமைக்கவுள்ளது. இதில் ஹெல உறுமய கலந்துகொண்டு தனது நிலைப்பாட்டை வெளியிடும்.

அதேபோன்று தமிழ் தேசியக்கூட்டமைப்பும் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள வேண்டும். முடியாது என்று கூறுவதற்கு சம்பந்தன் குழுவிற்கு உரிமை கிடையாது.

அரசியல் தீர்வு விடயத்தை மையப்படுத்தி தமிழ் தேசியக்கூட்டமைப்பு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் தவறான கருத்துக்களை பரப்பி வருகின்றது.

அதேபோன்று அரசியல் பிரச்சினை தமிழ் மக்களுக்கு காணப்படவில்லை என்பதே ஹெல உறுமயவின் நிலைப்பாடாகும். எனவே, அதிகாரப் பகிர்வோ தனிப்பட்ட தீர்வோ தமிழ் மக்களுக்கு தேவையில்லை. பொதுவாக கிராமிய மட்டத்தில் நிர்வாகம் அதிகாரபூர்வமாக்கப்படல் அவசியம். இதனை நோக்கிய நகர்வுகளை ஆதரிப்போம் என்றார். (அ-2)

## ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக இன்று போராட்டம்

(கொழும்பு)

ஊடக அடக்குமுறைக்கு எதிராக இன்றைய தினம் கொழும்பில் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இன்றையதினப் போராட்டத்திற்கு கறுப்பு ஜனவரி என பெயரிடப்பட்டுள்ளது.

நாட்டின் பல முன்னணி ஊடக அமைப்புக்கள் இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டுள்ளன. சர்வதேச சமூகம் மற்றும் ஊடக அமைப்புக்களின் தொடர் எதிர்ப்பையும் தாண்டி அரசாங்கம் ஊடகங்கள் மீது அடக்குமுறைகளை பிரயோகித்து வருவதாக-குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட போதிலும் ஊடக அடக்குமுறைகள் இன்னமும் முடிவுறுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்களின் காரணமாக சுய தணிக்கையுடன் செயற்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் முதல் மாதத்திலேயே பல்வேறு ஊடக ஒடுக்குமுறை சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அந்த அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

இன்றையதினம் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு எதிரில் கறுப்பு ஜனவரி ஊடக போராட்டம் நடைபெறவுள்ளது. (அ-2)



சார்ஜாவிலிருந்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வூந்தடைந்த பயணியொருவர் 12.5 மிலிலியன் ரூபா பெறுமதியான தங்க நகைகளுடன் விமான நிலைய சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் கைப்பற்றப்பட்ட தங்க நகைகளைப் படத்தில் காணலாம்.

## ரஷ்யாவிடம் நீர்மூழ்கி கப்பலை குத்தகைக்கு வாங்கிய இந்தியா

ரஷ்யாவின் நெர்பா ரக அணு ஆயுத நீர்மூழ்கி கப்பலை இந்திய கடற்படை 10 வருட குத்தகைக்கு எடுத்துள்ளது.

ரஷ்யாவின் நெர்பா ரக அணு ஆயுத நீர்மூழ்கி கப்பலிற்கு மொத்த குத்தகை தொகையாக 900 மில்லியன் டொலர்கள் வழங்கப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த மாதம் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது. நேற்று முன்தினம் ரஷ்யாவில் நடைபெற்ற விழாவில் இந்தியாவின் ரஷ்ய தூதர் அஜய் மல்கோத்ரா கலந்து கொண்டார்

அவரிடம் நெர்பாரக அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கப்பலுக்கு ஐ.என். எஸ். சக்ரா என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதன்மூலம் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளை தொடர்ந்து அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல் இயக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 6 ஆவது நாடாக இடம்பெறுகிறது. (அ-2)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

### பொலிஸாரால் ஏற்பாடு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நீதிச்சேவை ஆணைக்குழுவின் அனுசரணையுடன் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ்மா அதிபர் நீஸ் தழுவத்தையின் வழிகாட்டலின் கீழ் சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான விழிப்புணர்வூட்டல் செயலமர்வொன்று நேற்று முன்தினமும், நேற்றும் கிளிநொச்சி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழிப்புணர்வு செயலமர்வில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் சமூக விரோத குற்றச் செயல்கள், சமூக சீர்கேடுகள், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்தும் முகமாக அரச திணைக்களத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடையே விழிப்புணர்வை ஏற்படத்துவதே இதன் நோக்கமாக அமைந்தது.

இச்செயலமர்வில் கிளி.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சாலிய சில்வா கருத்துரைகளை வழங்கினார்.

அத்துடன் பிரதம விருந்தினராக கிளி. மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் செல்வம், சிறப்பு விருந்தினராக கிளி.மாவட்ட உளவளத் துறை வைத்திய அதிகாரி எம்.ஜெயராஜா, கிளி.மாவட்ட பிரதேச சபை தவிசாளர் மற்றும் பொதுத்திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2-7-15)

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்.
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவும் அற்றவர் வாய்ச் சொல் அருளீர்
ஆண்மை மிக்கவர் உழைப்பினை நல்கீர். – பாரதியார்.

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் பெருமையை நினைத்தபோது...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு அன்பு வணக்கம்!

எதற்கெடுத்தாலும் கலாசாரம், பண்பாடு, அவற்றின் பிறழ்வு என்று குறைபாட்டுப் புராணம் பாடுவது மட்டும்தான் நமக்கு வழக்கம் என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் உங்களின் பெருமைகளை அறியாதவர்களாக நாம் இருக்கவில்லை என்பதற்காக இக்கடிதம் அவசரமாக எழுதப்படுகிறது.

இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தபோது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கும் சென்றார்.

அங்கு கைலாசபதி அரங்கில் அவர் உரையாற்றினார்.

அப்துல் கலாமின் யாழ்ப்பாண வருகை, அவர் எமது பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை, இது பற்றி எல்லாம் நாம் அடைந்த மகிழ்ச்சியை விட, டாக்டர் அப்துல் கலாமின் உரையைக் கேட்பதற்காக–கலாமை ஒரு தடவை பார்த்துவிட வேண்டும் என்பதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நீங்கள் இடிபட்டதைப் பார்த்து எம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து விட்டன. அது ஆனந்தத்தின் அடையாளம்.

எங்கள் பிள்ளைகள் அறிவியலுக்காக ஏங்குகின்றவர்கள். அவர்களுக்கு சந்தர்ப்பங்களும் சூழ்நிலைகளும் சாதகமாக அமையவில்லையே தவிர, அவர்களிடம் அறிவியலுக்கான தேடல் தாராளமாக உண்டென்பதை உணர்ந்து கொண்டோம்.

உலகில் கொலை வெறிப் பாட்டிற்காக திரண்டு கொள்ளும் இளைஞர் சமூகம், பொப் இசைப் பாடலில் பிரியப்பட்டு அலையும் கூட்டம், நடிகைகளுக்கு கோயில் கட்டி அபிஷேகம் செய்யும் ரசிகர் மன்றம், பிரபல்யமான நடிகர்களிடம் கையெழுத்துப் பெறுவதற்காக இடிபடும் இளவல்களின் பேரணி இப்படியாக உலகம் அசைகையில்,

எங்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் ஓர் அறிஞரின் உரையைக் கேட்பதற்காக இடிபட்டு நெருக்குப்பட்டார்கள் என்றால்,

அது உலகில் எங்கும் நடக்காத சிறப்பு என்பதை மார்தட்டிக் கூறமுடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு இந்திய குடியரசின் முன்னாள் தலைவரும் விஞ்ஞானியுமான டாக்டர் அப்துல் கலாம் வருகை தந்தார் என்ற வரலாற்றுப் பெருமையிலும் மிஞ்சுவதாக, அவரின் உரையைக் கேட்பதற்காக எங்கள் பல்கலைக்கழக மாண்வர்கள் முண்டியடித்தார்கள் என்ற பெருமை இருக்கும் என்று அடித்துக் கூற முடியும்.

அன்புக்கினிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியாளர்களே! மாணவர்களே! டாக்டர் அப்துல் கலாமின் உரை எங்கள் மாணவர்கள் கேட்பதற்கு முடியாமல் போனதன் காரணம் என்ன?

கைலாசபதி கலையரங்கின் உள்ளடக்கம் போதுமானதல்ல என்பதுதானே.

இந்தக் குறைக்கு முடிவு கட்ட வேண்டும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு என மிகப் பிரமாண்டமான மண்டபம் அமைக்கப்பட வேண்டும். இதற்காக அனைவரும் சேர்ந்து ஒரு பெரும் நிதியைத் திரட்டுங்கள்.

கோபுரம் கட்டுவதற்கு கோடி கொடுக்கும் தனவந்தர்களுக்கும் வாரி இறைக்கும் எங்கள் புலம்பெயர் தமிழ் மக்களுக்கும் நிலைமையை எடுத்துச் சொல்லுங்கள்.

மண்டப நிதியத்தை ஆரம்பியுங்கள். நிதி சேகரிக்கும் காலத்தைத் தீர்மானியுங்கள். மண்டபத்தை நிர்மாணியுங்கள். அறிஞர்களை அழையுங்கள். ஆய்வரங்குகளை நடத்துங்கள்.

எங்களிடமும் அப்துல் கலாமிற்கு நிகரான அறிஞர்கள் இருக்கிறார்கள் என்பதை நிரூபியுங்கள்.

அதுபோதும் எங்கள் இனம் தலைத் தோங்குவதற்கு.

# யாழ்.தொல்பொருள் சரணாலயத்தில் பொலிஸ் நிலையம் அமைக்க முடிவு

## அமைச்சர் ஜகத் பாலசூரிய தெரிவிப்பு

யாழ்.தொல்பொருள் சரணாலயத்தில் பொலிஸ் நிலையமொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி தீர்வொன்றை பெற்றுக் கொள்ளவுள்ளதாக தேசிய மரபுரிமைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தொல்பொருள் திணைக்களத்தால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய கூறியுள்ளார்.

தொல்பொருள் கட்டளை சட்டத்தின் கீழ் குறித்த பிரதேசத்தில் புதிய கட்டம் ஒன்றை நிர்மாணிப்பது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ்.கோட்டைக்கு அருகில் இந்தக் கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமான குறித்த இடத்தில் அவ்வாறான கட்டிடங்களை நிர்மாணிக்க முடியாததென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் யாழ் பொலிஸ் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் தற்போது நாட்டப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# முல்லைத்தீவில் 945 ஆசிரியர்களுக்கு ஜனவரி மாத சம்பளம் வழங்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதத்திற்கான சம்பளம் இன்னும் வழங்கப்படவில்லை என இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பிரதான செயலாளர் ஜோசப் ஸ்டாலின் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அனைத்து அரச பாடசாலை ஆசிரியர்களுக்கும் மாதாந்தம் 20ம் திகதி சம்பளம் வழங்கப்படும். எனினும் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்கு உட்பட்ட 55 பாடசாலைகளில் உள்ள 945 ஆசிரியர்களுக்கு ஜனவரி மாதத்திற்கான சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை. குறித்த திகதிக்கு சம்பளம் வழங்கப்படாததால் அந்த ஆசிரியர்கள் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் வட மாகாண ஆளுநரின் செயலாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவித்துள்ளது.

குறிப்பாக முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குதல், சம்பள அதிகரிப்பு, சுற்றறிக்கைகளை செயற்படுத்தல் உள்ளிட்ட விடயங்கள் முறையாக இடம்பெறுவதில்லை.

ஏனைய மாகாணங்களைப் போல் இந்த மாகாண ஆசிரியர்களுக்கும் சம்பளம் மற்றும் சம்பள உயர்வு என்பவற்றை உரிய காலத்தில் வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பா)

## மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரம் ஜே.வி.பி கிளர்ச்சிக் குழு வலியுறுத்து

(கொழும்பு)

13-வது திருத்தத்திற்கமைய காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என ஜே.வி.பியில் இருந்து விலகியுள்ள கிளர்ச்சிக் குழுவான மக்கள் போராட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.

அந்த இயக்கத்தின் அரசியல் செயலாளர் புபுது ஜாகொட சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கம் முன்வைத்துள்ள செனட் சபை என்ற யோசனையை தான் நம்பவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தமக்கு கொள்கை ரீதியிலான முரண்பாடுகள் இருந்தாலும் கூட்டமைப்பின் கோரிக்கை தமிழ் மக்களின் கோரிக்கை என்றால் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு தமது அமைப்பு இணங்குவதாக ஜாகொட தெரிவித்துள்ளார். (பா)

## வடக்கு கிழக்கு தாதியர் பற்றாக்குறை; நீக்க விசேட நடவடிக்கை

(கொழும்பு)

5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்கள் கடமையாற்றியுள்ள இதுவரையில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றாத தாதியர்களை அம் மாகாணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றுவதற்கான இடமாற்றங்களை வழங்குவதற்கு சுகாதார அமைச்சு நேற்று தீர்மானித்துள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவும் தாதியர்கள் பற்றாக்குறை யை நீக்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (பா)

## சந்திரிகா தோட்டத்தில் மாயமான மரவள்ளி

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஹொரகொல்ல வளவில் பயிரிடப்பட்டிருந்த மரவள்ளிக் கிழங்குகள் களவாடப்பட்டிருப்பதாக நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 475 கிலோ கிராம் நிறையைக் கொண்ட மரவள்ளிக் கிழங்கு களவாடப்பட்டிருப்பதாகவும் இதன் பெறுமதி சுமார் 19 ஆயிரம் ரூபாய் எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

## புதிய முதலீடு ஊக்குவிப்புக்கள்

இலங்கை முதலீட்டுச் சபையினால் நடப்பாண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக புதிய முதலீடுகளை ஊக்குவிக்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் 25 மில்லியன் ரூபாயிற்கு மேற்பட்ட நிதியினை விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கல்வி, உல்லாசப் பயணத்துறை, பொது வசதிகள், தகவல் தொழில்நுட்பம், அடிப்படைக் கட்டுமான வசதிகள், ஏற்றுமதி நோக்கிலான கைத்தொழில்கள் மற் றும் சேவைகளிற்கே முதலீடுகள் வழங்கப்படவுள்ளன.

இம் முதலீடுகளிற்கு இறக்குமதித் தீர்வை விலக்களிப்பதுடன் 4- 12 ஆண்டுகள் வரி விடுதலை வழங்கப்படும் எனவும் வட மாகாண காரியாலய முதலீட்டு சபையின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் ஆர். ஜெயமனோன் அறிவித்துள்ளார்.

இதன் மேலதிக தகவல்களை www.investsrilanka.com எனும் இணையத்தளத்திலும் தேசிய வீடமைப்பு செயலகக் கட்டிடம், முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள எமது வட மாகாண காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். (அ-7)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

### நாள் கணக்கில் சிந்தியுங்கள்



அனைத்திலும் கடவுளைக்காண்பது தான் மனிதனின் இலட்சியம். அனைத்திலும் பார்க்க முடியாவிட்டால் நாம் மிகவும் நேசிக்கும் ஒன்றிலாவது பார்க்க வேண்டும்.

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒரு போதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக்கொண்டு போகிறது.

உண்மை, தூய்மை, சுயநலமின்மை ஆகிய இந்த மூன்றும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ, அவற்றைப் பெற்றிருப்பவர்களை நசுக்கக்கூடிய ஆற்றல் விண்ணுலகிலோ மண்ணுலகிலோ எங்குமே கிடையாது. இந்த மூன்றையும் பெற்றுள்ள ஒருவனைப் பிரபஞ்சம் முழுவதுமே எதிர்த்து நின்றாலும் அதை எதிர்த்து நிற்கக்கூடிய ஆற்றல் அவனுக்கு உண்டு.

எண்ணமே நம்மில் தூண்டும் சக்தி. மனத்தை உயர்ந்த எண்ணங்களில் நிரப்புங்கள். நாட்கணக்காகச் சிந்தியுங்கள். தோல்விகளைப் பொருட்படுத்தாதீர்கள்.

# அசாம் அரசுக்கு எதிராக செயற்பட்டு வந்த பயங்கரவாத அமைப்பினர் திருந்திவாழ முடிவு

(கவுகாத்தி)

அசாம் மாநிலத்தில் அரசுக்கெதிராக செயற்பட்டு வந்த பல்வேறு பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்டோர் திருந்தி வாழ முடிவு செய்து உள்ளனர். இன்று அவர்கள் ஆயுதங்களை ஒப்படைக்க உள்ளனர். இவர்கள் மத்திய உள்துறை அமைச்சர், முதல்வர் ஆகியோர் முன்னிலையில் சரணடைகின்றனர்.

வடகிழக்கு மாநிலமான அசாமில் அரசுக்கெதிராக உல்பா, குகி உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்புக்கள் செயற்பட்டு வருகின்றன. மத்திய, மாநில அரசும் அவ்வப்போது இவர்களை அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைப்புவிடுத்தும் வந்தது.

இந்த சூழ்நிலையில் முதன்முறையாக அசாம் வரலாற்றில் இல்லாத அளவிற்கு அம் மாநிலத்தில் செயற்பட்டு வந்த 9 பயங்கரவாத அமைப்புகளைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்டோர் நேற்றையதினம் தங்களது ஆயுதங்களை அரசிடம் ஒப்படைத்து விட்டு சரணடைந்துள்ளனர்.

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், அசாம், முதல்வர் தருண்கோகய் மற்றும் மூத்த இராணுவ உயரதிகாரிகள் முன்னிலையில் நேற்றையதினம் இவர்கள் சரணடைந்துள்ளனர்.

இந்தபயங்கரவாத அமைப்புக்களில் குகி புரட்சி இராணுவம், ஹமர் மக்கள் புரட்சி முன்னணி, பிர்ஸா கமாண்டோ படை, கோப்ரா ஆதிவாசி என்பன முக்கிய அமைப்புகள் ஆகும். இது குறித்து முதல்வர் தருண்கோகய் கூறுகையில், இந்த ஒன்பது அமைப்புகளு டன் ஏற்கனவே முறையான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் இவர்கள் முதலில் ஆயுதங்களை கீழே போட வேண்டும் என வலியுறுத்தியபின்னர்சரண்டைய முடிவு செய்ததாகவும் இவர்களின் முடிவு மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றார். (அ-2)




# பாகிஸ்தானுடன் நட்புகொள்வதற்கு இந்தியா முழுமையாக முயற்சிக்கின்றது

## நிருபமா ராவ் தெரிவிப்பு

இந்தியா- பாகிஸ்தான் இடையே நட்புறவு ஏற்படுவதற்கான முழு முயற்சியையும் இந்தியா மேற்கொண்டுள்ளது. ஆனால் ஒவ்வொரு முறையும் அந்த முயற்சியை பாதிக்கும் வகையிலான நடவடிக்கைகளை பாகிஸ்தான் மேற்கொண்டுள்ளது என்று அமெரிக்காவிற்கான இந்திய தூதர் நிருபமா ராவ் கூறியுள்ளார்.

வோஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய நிருபமா ராவ், இந்தியா- பாகிஸ்தான் இடையே உள்ள பிரச்சினைகளை தீர்க்கவும் சுமுகமான நட்புறவை உருவாக்கவும் நேர்மையான முயற்சிகளில் ஈடுபட்டுளோம். ஆனால் அது அவ்வளவு எளிதான காரியமல்ல. பல கடினமான விடயங்கள் உள்ளன. அதனை நாங்கள் உணர்ந்தே உள்ளோம்.



இரு நாடுகளிடையே மேற்கொள்ளப்படும் வணிகம், போக்குவரத்து ஆகியவையே இருநாட்டு நல்லுறவை வளர்க்கும் பாலமாக இருக்கும். இருநாட்டு எல்லைப் பகுதிகளில் அமைதி திரும்ப வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பு. ஆனால் பாகிஸ்தானில் பயங்கரவாதிகளின் தாக்கம் அதிகமாக உள்ளது. அது குறைந்தால் மட்டுமே சுமுக உறவு நீடிக்கும் என அவர் கூறியுள்ளார். (அ-2)

# கன்னட மண்ணில் தமிழை ஒரு பாடமாக்க அந்நாட்டு தமிழமைப்புக்கள் கோரிக்கை

(பெங்களூர்)

கன்னட மண்ணில் தமிழுக்கு பல்கலைக்கழக இருக்கை கிடைக்குமா என்று கர்நாடக தமிழர்கள் ஏங்கி வருகின்றனர். திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற முதுமொழிக்குத் தக்கவர்களாக உலகம் முழுவதும் பரந்து வாழும் இனத்தவர் தமிழர்கள். இதற்கு கர்நாடகமும் விதிவிலக்கல்ல.

தென் கர்நாடகத்தின் பெங்களூர் நகரம், பெங்களூர் ஊரகம், இராமநகரம், மைசூர், கோலார், ஹாசன், மண்டியா, சாமராஜ்நகர், வடகர்நாடகத்தின் ஷிமோகா, பெல்லாரி, ஹூப்ளி போன்ற மாவட்டங்களில் 10 ஆம் நூற்றாண்டு முதல் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். கர்நாடக தமிழர்கள் அண்மைக் காலமாக எதிர்கொண்டுள்ள கேள்வி அடுத்த தலைமுறைக்கு தமிழைக் கொண்டு சேர்ப்பது எப்படி என்பதுதான். இதற்கு ஒரே பதில் தமிழ்மொழியை ஒரு மொழிப்பாடமாக கற்பிப்பதுதான்.

ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழே இல்லாத பட்சத்தில் இது எப்படி சாத்தியமாகும்.

இதற்குத் தீர்வாக கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் தமிழ்த்துறை நிறுவ வேண்டுமென்று பெங்களூர் தமிழ்ச்சங்கம் உள்ளிட்ட தமிழ் அமைப்புக்கள் நீண்ட காலமாக கோரி வருகின்றன. (அ-2)

# உத்தரகண்ட் சட்டசபை பிரசாரம்; ராகுல்காந்தி மீது சப்பாத்து வீச்சு

(டேராடூன்)

உத்தரகண்டில் தேர்தல் பிரசார கூட்டத்தில் பங்கேற்ற காங்கிரஸ் பொதுத் செயலர் ராகுல் மீது நேற்று முன்தினம் வாலிபர் ஒருவர் சப்பாத்தை வீசினார்.

உடனடியாக அந்த வாலிபரை பொலிஸார் கைது செய்தனர்.


உத்தரகண்ட மாநிலத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அதிக இடங்களில்வெற்றிபெறவேண்டும் என்பதற்காக அந்தக் கட்சியின் பொதுச் செயலர் ராகுல் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றார்.



இந்நிலையில் டேராடூனில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டம் ஒன்றில் ராகுல் பங்கேற்ற போது அவரை நோக்கி வாலிபர் ஒருவர் சப்பாத்தை வீசினார். ஆனால், அது ராகுல் இருந்த இடத்திலிருந்து 10 மீற்றர் தூரத்தில் விழுந்தது. உடன் ஷூ வீசிய கிஷன்லால் என்ற வாலிபரை பொலிஸார் சுற்றி வளைத்து கைது செய்தனர். அவரிடம் தீவிர விசாரணை நடைபெற்று வருகின்றது.

சப்பாத்து வீசிய வாலிபரை காங்கிரஸ் தொண்டர்களும்ஏனையவர்களும்தாக்க முற்பட்ட போது அவரைத் தாக்க வேண்டாம் என்றும் ராகுல் கேட்டுக் கொண்டார்.

பலமான லோக்பால் மசோதாவை வலியுறுத்தி அன்னா ஹசாரே அணியினர் பிரசாரத்தைத் ஆரம்பித்த போது அங்குள்ள அரங்கம் ஒன்றில் அவர்களின் மீது சப்பாத்து வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வீரதீர சிறுவர்களுக்கான விருது வழங்கும் விழாவில் பிரதம் மன்மோகன் சிங் கலந்து கொண்டு உ.பீயை சேர்ந்த ஓம்பிரகாஷுக்கு விருது வழங்கி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# பொற்கோவில் பற்றி கிண்டல் செய்த தொகுப்பாளருக்கு இந்தியா கண்டனம்

(வோஷிங்டன்)

சீக்கியர்களின் புனித தலமான பொற்கோவில் பற்றி கிண்டல் செய்த அமெரிக்காவின் பிரபல ரிவி தொகுப்பாளர்களுக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் என்பி.சி. ரிவியில் தி டுனைட் ஷா என்ற புகழ்பெற்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகி வருகின்றது.

இந்நிகழ்ச்சியில் கடந்த 19 ஆம் திகதி பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரசில் உள்ள சீக்கியர்களின் புனித தலமான பொற்கோவில் காட்டப்பட்டது. அதற்கு விளக்கம் அளித்த லெனோ, இக்கோவில் அநேகமாக குடியரசுக் கட்சி வேட்பாளர் மிட் ரோம்னியின் கோடை வாசஸ்தலமாக இருக்க வாய்ப்புள்ளது எனக் கிண்டல் செய்திருந்தார்.

இதையடுத்து அமெரிக்காவில் உள்ள சீக்கியர்கள், லெனோவின் மின்னஞ்சலுக்கு புகார் அனுப்பினர். இதற்காகவே பேஸ்புக் சமூகவலைத்தளத்தில் தனிப் பக்கம் திறந்து அதில் லெனோவுக்கு எதிராக கண்டனம் தெரிவித்தனர்.

இந்நிலையில் தற்போது அமெரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மத்திய வெளிநாடு வாழ் இந்தியர் விவகாரத்துறை அமைச்சர் வயலார் ரவி, இதுகுறித்து நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் கூறியதாவது, லெனோவின் கிண்டல் கண்டனத்திற்குரியது. துரதிர்ஷ்டவசமானது. பொற்கோவில் சீக்கியர்களின் புனித தலம். புத்தாண்டிற்கு எங்கள் பிரதமர் அத்தலத்திற்குச் சென்று வழிபாடு செய்துள்ளார். இதை லெனோ அறியாமல் இருந்திருக்க மாட்டார். இது போன்ற சம்பவங்கள், இனி அமெரிக்காவின் எந்த ஊடகத்திலும் நடக்கக் கூடாது. இது குறித்து அமெரிக்க அரசு கவனிக்க வேண்டும். ஊடக சுதந்திரம் என்பது பிறரது உணர்வுகளை புண்படுத்துவது அல்ல. இது குறித்து நடவடிக்கை எடுக்கும்படி இந்தியத் தூதரகத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என தெரிவித்தார். (அ-2)

# இந்திய- மியன்மார் அமைச்சர்கள் இருநாட்டு உறவுகள் குறித்து பேச்சு

(புதுடில்லி)

இந்திய மற்றும் மியன்மார் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் இன்று டில்லியில் சந்தித்து இருநாட்டு உறவுகள் குறித்து முக்கிய பேச்சு நடத்த உள்ளனர்.

இந்தியாவுக்கும் முன்பு பர்மா என்று அழைக்கப்பட்ட மியன்மார் நாட்டிற்கும் இடையே நீண்டகால நட்புறவு இருந்து வருகின்றது. மியன்மாரில் கடந்த பல வருடங்களாகவே இராணுவ ஆட்சி நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையில் மியன்மார் வெளியுறவுத்துறை அமைச்சர் வூனா மவுங் லிவின் நேற்று முன்தினம் 3 நாட்கள் பயணமாக இந்தியா வந்துள்ளார். அவர் நேற்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்பின் போது இரு நாட்டு உறவில் சமீபகாலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இரு தரப்பினரும் விவாதித்தனர்.

மியன்மார் நாட்டின் எல்லைப் பகுதியில் இந்தியாவின் வடகிழக்கு பகுதியைச் சேர்ந்த உள்நாட்டு கிளர்ச்சியாளர்கள் ஆயுதப் பயிற்சி எடுத்து வருவதாக கூறப்படுகின்றது. இதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று மியன்மார் அரசை இந்தியா வலியுறுத்தி வருகின்றது.

மியன்மார் நாட்டில் எதிர்வரும் மே மாதம் ஒரு முக்கிய உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வருமாறு பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மியன்மார் அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த அழைப்பிற்கு இணங்க பிரதமர் மன் மோகன் சிங் வருகின்ற மே மாதம் அங்கு செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

# மரண அறிவித்தல்

## கனகசபை விஜயரத்தினம்

**(உரிமையாளர் - கண்ணன் பெயின்ற், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**



வண்ணார்பண்ணை, ஒட்டுமடத்தை பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு,கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை விஜயரத்தினம் நேற்று 24.01.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ரஞ்சினியின் (பாமா) அன்புக் கணவரும் யசோதரன் (லண்டன்), பிரபவன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும் சரஸ்வதி, அமரர் சண்முகசுந்தரம், அமரர் லீலாவதி, பஞ்சரத்தினம், அருமைநாயகம் (கொழும்பு), செல்வரத்தினம் (பிரான்ஸ்), குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சண்முகராஜா (இந்தியா), பஞ்சலிங்கம் (லண்டன்), கோணேஸ்வரி (கனடா), நித்தியானந்தன் (ஜேர்மனி), சச்சிதானந்தன் (சவூதி), சாந்தி (லண்டன்), சிவானந்தம், பரமானந்தம், லலிதாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25.01.2012 புதன்கிழமை அவரது இல்லத்தில் இடம் பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விஜய் மஹால்,**
**பழைய தபாற் கந்தோர் வீதி,**
**கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்**

(C-5660)

# உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு.....



## கனகசபை விஜயரத்தினம்

**(உரிமையாளர் - கண்ணன் பெயின்ற், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)**

ஊருக்கும் உறவுக்கும் சேவை செய்து
நற்குணங்களின் சிகரமாய்
அன்புக்கு இலக்கணமாய்
கருணைக்கு ஊன்று கோலாய்
நட்புக்கு எடுகோளாய்
நீர் வாழ்ந்த உள்ளத்தை
உருக்கும் நினைவுகளுடன்
எம் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்கி,
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்து அவரது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமைத்துவ பணிப்பாளர்கள்
அக்ஷோ நோபில் பெயின்ற் லங்கா பிரைவேற் லிமிட்டட்,
199, கியூ வீதி,
கொழும்பு - 02.

உரிமையாளர், ஊழியர்கள்
சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்,
சிவகுமரன் என்ரபிறைஸ்,
யாழ்ப்பாணம்.

(C-5660)

# மகசின் சிறையில்...

அரசியல் கைதிகள் அனைவரும் பாதுகாப்பாக ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர்.

சிறைச்சாலைக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் நேற்றுக் காலை ஆணையாளர் சகிதம் கைதிகளை பார்வையிட வந்தபோதே சிறைக்கைதிகள், இருவரையும் சுற்றிவளைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறைச்சாலைகள் ஆணையாளர் மீது அதிருப்தி கொண்டசிறைக் கைதிகள் ஆணையாளரை உடனடியாக பதவி விலகக்கோரி இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

ஆணையாளர் கைதிகள் தொடர்பில் கடும்போக்கை கடைப்பிடித்து வருவதாகக் கூறியே கைதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில்பொலிஸ் பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவிக்கையில்,

புதிய மகசின் சிறைச்சாலைக்குள் சுமார் 1800 சிறைக் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர், போதைப் பொருள் விவகாரங்களில் சிறைத் தண்டனை அனுபவிப்பவர்களாவர்.

இவர்கள் மத்தியில் இப்பொழுதும் போதைப் பொருள் பாவனை இருந்து வருகிறது. கைதிகள் மத்தியில் போதைப் பொருட் பாவனையை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் முகமாக புதிய ஒழுங்கு விதிகளை சிறைச்சாலை நிர்வாகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த புதிய ஒழுங்கு விதிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்றுக் காலை 11.10 மணியளவில் சிறைக் கைதிகள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பதாகைகளை ஏந்தியவாறு தங்களது எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளனர்.

**அதிகாரிகள் மீது தாக்குதல்**

இந்நிலையில், இவர்களை கட்டுப்படுத்த முயற்சித்த அதிகாரிகள் மீது மேற்படி கைதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். கற்கள் மற்றும் கூரிய ஆயுதங்களைக் கொண்டு சிறைச்சாலை அதிகாரிகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இதனால் அதிகாரிகள் நால்வர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலைக்குள் காணப்பட்ட பழமை வாய்ந்த கட்டிடமொன்று தற்பேது உடைக்கப்பட்டு வருகின்றது. அக்கட்டிடத்திலிருந்து அகற்றப்பட்ட செங்கற்களால் மேற்படி சிறைக் கைதிகள் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து, நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக விசேட பொலிஸார், இராணுவத்தினர், பொலிஸ் அதிரடிப் படையினர், கலகமடக்கும் பொலிஸார் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் என சிறைச்சாலை வளாகத்துக்குள் குவிக்கப்பட்டனர். இருப்பினும் அவர்கள் மீது சிறைக்கைதிகள் தாக்குதல்களை நடத்தினர்.

**கண்ணீர் புகைக்குண்டு துப்பாக்கிப் பிரயோகம்**

இந்நிலையில், சிறைக் கைதிகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக பொலிஸாரால் கண்ணீர்ப் புகைக்குண்டு பிரயோகமும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற் கொள்ளப்பட்டது.

இந்த மோதல் சம்பவத்தினால் சிறைச்சாலை அதிகாரிகள் நால்வர் உட்பட 28 பேர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்னர்.

**புலிச்சந்தேக நபர்கள்**

மோதல் சம்பவத்தின்போது மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 180 விடுதலைப் புலி சந்தேக நபர்கள் ஏனைய சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டனர். மோதலின்போது அவர்கள் மீது ஏதேனும் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்ற சந்தேகத்திலேயே அவர்கள் இட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

அத்துடன், பாதுகாப்பு தரப்பினரால் தற்போது நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (பா-11)

# நிபுணர்...

தீர்மானிக்க வேண்டும் என மார்ட்டின் நெஸர்க்கி குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற போரின்போது ஐக்கிய நாடுகள் சபையின் கடப்பாடுகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் ஆய்வு இதுவரை தயாரித்து முடிக்கப்படவில்லை என அவர் மேலும் கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது ஐக்கிய நாடுகள் சபையின் கடப்பாடுகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தொராயா ஒபெய்டை ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

# 13-வது...

கொள்கை அமுல்படுத்தப்பட்டமையால் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய இருமொழிகளையும் தெரிந்தவர்களாக காணப்படுவர். இதற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் அவர்களால் உரையாற்ற முடியும்.

இதனூடாக மக்கள் மத்தியில் ஓர் ஒற்றுமை ஏற்படும். மும்மொழிக் கொள்கை தொடர்பான பாடத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தல், பாடசாலைகளில் எவ்வாறு மும்மொழிக் கொள்கையினை அமுல்படுத்தப்படல் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தினேன்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டிய அவசியத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எடுத்துரைத்தேன். அத்துடன் 13வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் அதிகார வலுவூட்டல் தொடர்பிலும் ஆலோசனையை வழங்கினேன் எனவும் டாக்டர் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார். (பா)

# தமிழ் மக்களுக்கு நீதி...

ஊடகங்கள் மற்றும் குடியியல் சமூகக் குழுக்கள் மீதான அச்சுறுத்தல்கள், வடக்குக் கிழக்கில் நில அபகரிப்பு மற்றும் பாதுகாப்பின்மை பற்றிய பெருமளவு முறைப்பாடுகள் அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்களில் இருந்து படைத்தரப்பினரை உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு விடுவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் பொறுப்புக் கூறல் என்பது வழக்கற்றுப்போன விவகாரமாகவே நீடித்தது.

ஊடகங்கள் அதிக தணிக்கையை எதிர்கொண்டன. இலங்கையில் போருக்கு காரணமாக காரணிகள் தொடர்பில் கரிசனை செலுத்தப்படவில்லை என மனிதவுரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார்.

சர்வாதிகாரத் தன்மை கொண்ட இலங்கை அரசாங்கத்தின் அநீதி, பலவீனமான ஆட்சி அதிகாரம், நில அபகரிப்பு மற்றும் ஊடகங்கள் மீதான தணிக்கையை இலங்கையர்கள் எதிர்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது மேற்கொள்ளப்பட்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் படைத்தரப்பினரை பாதுகாத்துள்ள உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு, இக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறும் வகையில் எவ்விதமான உறுதியான பரிந்துரைகளையும் முன்வைக்கவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது ஈடுபட்ட இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழு பரிந்துரைத்த சுயாதீனமான சர்வதேச பொறிமுறையையும் உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு நிராகரித்துள்ளது. அத்துடன், இவ்வறிக்கை பல குறைபாடுகளைக் கொண்டிருந்ததை மனிதவுரிமை அமைப்புக்களும், சர்வதேச தொண்டு நிறுவனங்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கடந்த டிசம்பர் மாதம் மனிதவுரிமை செயற்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜ், மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் காணாமல்போன விவகாரங்கள் குறித்து மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் கவனம் கொண்டுள்ளது.

இலங்கை ஊடகங்களுக்கான விதிமுறைகளை அரசாங்கம் வெளியிடும் என கடந்த நவம்பர் மாதம் அரசாங்கத்துக்குச் சொந்தமான டெய்லி நியூஸ் பத்திரிகை அறிவித்தது. செய்தி இணையத்தளங்கள் அனைத்தையும் பதிவு செய்து கொள்ளுமாறு ஊடக அமைச்சு பணித்தது. இலங்கை அரசாங்கத்தின் மீது குற்றங்கண்ட குறைந்தது ஐந்து இணையத்தளங்கள் அடுத்தடுத்து தடை செய்யப்பட்டுள்ளன.

குறைகாணலுக்கு அடக்குமுறைகளின் வாயிலாக பதிலளிப்பதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் சுதந்திர ஊடக நெறிமுறையை அபாயத்துக்கு உள்ளாக்குகிறது. யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் யூன் மாதம் இடம் பெற்ற தேர்தலின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் படைத்தரப்பினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

2011ஆம் ஆண்டில் வடக்கு கிழக்கில் பல முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ள போதிலும், அப்பகுதிகளில் இயல்பு வாழ்வை ஏற்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் போதிய கவனத்தை செலுத்தவில்லை. பாலியல் வல்லுறவுகள், அச் சுறுத்தல்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன். இப்பிரதேசங்களின் பாதுகாப்பு என்பது மோசமாகவே இருக்கின்றது. கடந்த வருட நடுப் பகுதியில் இடம் பெற்ற மர்ம மனிதர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் பொது மக்களின் பாதுகாப்புத் தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளது.

படைத்தரப்பினர் வடக்கு கிழக்கில் பெருமளவு நிலை கொண்டுள்ளமையானது தமிழ் மக்கள் மீதான நம்பிக்கையின்மையின் வெளிப்பாடாகவே உள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற போருக்கு காரணமான முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான நிலப் பிரச்சினை தொடர்ந்து தீர்க்கப்படாததாகவே இருக்கின்றது.

2011 ஆம் ஆண்டில் வடக்கிலும் நாட்டின் பிறவிடங்களிலும் படைத் தரப்பினருக்கு எதிரான நில அபகரிப்புப் முறைப்பாடுகள் அதிகரித்துள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது இடம் பெயர்ந்த பெரும்பாலான மக்கள் இன்னமும் தங்களின் வீடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியவில்லை. பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் தீவிர உறுப்பினர்களான ஆயிரம் போராளிகளின் நிலைமை குறித்து எதுவும் தெரியவில்லை. அத்துடன், இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் சித்திரவதைக்கு உள்ளாவது மற்றும் துன்புறுத்தப்படுவது குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை.

இலங்கையில் அவசரகாலச் சட்டம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நீக்கப்பட்டுள்ளபோதிலும், குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரை 18 மாதங்கள் வரை வழக்குத் தாக்கல் செய்யாமல் தடுத்து வைத்திருக்க நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் அனுமதிக்கின்றது என நியூயோர்க்கை தளமாகக் கொண்ட மனிதவுரிமைகள் கண்காணிப்பகம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (பா-11)

# 13ஆவது...

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கும் நடவடிக்கையில் பூரண ஒத்துழைப்பு வழங்கவும் யோசனைத் திட்டங்களை பரிந்துரை செய்யவும் ஐக்கிய தேசியக் கட்சி தயார் நிலையில் இருக்கின்றது.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை பகிர்வது தொடர்பில் 13ஆம் திருத்தச் சட்டமூலத்தில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்கம் விரும்பினால் இந்த சட்டமூலத்தை அமுல்படுத்துவதில் சிக்கல் நிலைமை இருக்காது. அரசியல் ரீதியான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதில் அரசாங்கத்திற்கு நாட்டம் கிடையாது என்பதே தற்போதைய மிகப் பெரிய பிரச்சினை.

அரசாங்கமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நடத்திவரும் பேச்சு வார்த்தைகளில் பயன் கிட்டுமா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.

பாராளுமன்றத் தெரிவுக்குழு சர்வகட்சிப் பேரவையைப் போன்ற தொன்று. எனவே சர்வகட்சிக் குழுவின் நிலைமையே பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு ஏற்படும்.

சர்வகட்சிப் பேரவையால் முன்மொழியப்பட்ட யோசனைத் திட்டங்களை அரசாங்கம் குப்பைக் கூடையில் வீசி எறிந்ததாக திஸ்ஸ அத்தநாயக்க மேலும் தெரிவித்தார். (பா)


## கார் விற்பனைக்கு



மூன்று சில்லு புத்தம் புதிய நல்ல நிலையிலுள்ள சிவப்பு கலர் கார் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:-
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.
தொ.பே.இல: 072 8043270

(7360)

## மலிவு விலையில் BRANDED கணனிகள்



அவுஸ்ரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள் (IBM, Dell, HP, Compaq - Branded) போன்றவற்றை உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். எங்கும் பெற்றிராத விலைக்கழிவில் கணனி உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



PC MATE SYSTEMS
Computer Sales & Repair

174/16, கோவில் வீதி, நல்லூர்.
(கைலாசபிள்ளையார் கோவில் அருகில்)
021 222 4692 / 077 053 0566


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது